சிவமயம்.

ஓம் பிரஹ்மணேநம

ஸ்ரீ சிவோஹம்
சிரவணக் கட்டளை

சாது மௌன

இரங்கசுவாமி அவர்களால்

இயற்றப்பட்டு

ஈரோடு சேன்ட்ரல் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1922.

உ

சிவமயம்.

ஓம் பிரஹ்மணே நம:

ஸ்ரீ சிவோக சிரவணக் கட்டளை.

இவை

கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சுவாமி மகாதேவர்
பாத சேவிதராகி, வித்வத் சந்நியாசியாய்
விளங்கா நின்ற சாது மௌன

இரங்கசுவாமிகள் அவர்களால்

இயற்றப்பட்டு

பவானி தளவாய்பேட்டை
கொ. ஆ. இரங்கசாமி செட்டியார்
அவர்களால்

ஈரோடு சேன்ட்ரல் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.

துந்துபி-ஞ ஆவணி-மீ 30-உ

இதன் விலை 1922 அணா 0-5-0

உ

சிவமயம்.

முகவுரை.

இந்நூல் வேதமுடிவான உபநிஷத்சாரமானதும் தமிழ் நூலாலாகிய சகல வேதாந்த சாஸ்திரத்தின் சாரமானதும். வியாக்கியான வடிவினதும். ஆகிய இந்நூலை வாசித்து அதி லுள்ள அர்த்தத்தை மனதில் தாரணை செய்தவர் உபநிஷத் சங் கரபாஷியம் சூத்திரம் வார்த்திக முதலிய சுருதியின் அர்த்தங் களை நன்குவுணர்ந்தவராவாரென்பது திண்ணம்.

சமுஸ்கிருத முணராதவர்கள் உபநிஷத்தர்த்தங்களை அறியமுடியாதாம். இந்நூலால் அவைகளினர்த்தங்களை எளி திலறியலாம் இஃதன்றி நமது பவசாகரத்தை நாசமாக்கு வதற்கு இந்நூல் பிரளயகால வடவானலமாம்.

ஆனதால் வேதாந்தம்படிக்க விரும்புவோர் ஒவ்வொரு வரும் இதை முதலில் வாசிக்கவேண்டும் இல்லாவிட்டால் மற்ற நூலின் அர்த்தம் சேற்றில் புதைத்த ரத்தினம்போலிருந்த வண்ணமேயிருக்கும்.

மனுஷசரீரம் மிகவும் துர்லபம் கோடைகாலத்து மத்தி யான சூரியனால் தபிப்பிக்கப்பட்ட புழுதியில் ஒருவன் கையி னின்றும் நழுவிய நெய்யானதுமீண்டும் அந்நெய் கையில் வாராது. அதுபோல் இம்மனுஷ சரீரம் நஷ்டமானபின்னர் இதைப்போலினிவாராது. ஆகலின் ஹே அன்பர்காள் நமது ஜனன மரணாதி துக்கநிவிருத்தியின் பொருட்டு இந்நூல் சிர வணத்தால் ஆத்ம ஞானத்தை அவசியம் சம்பாதிக்கவேண்டும். இந்நூலின்கண் சொற்றவறும் பொருட்டவறுமிருப்பி னுலகம் பொறுக்க;

இந்நூலாசிரியர் சாது மௌன இரங்கசுவாமிகளின் மாணுக்கரில் ஒருவராகிய பவானி தளவாய்பேட்டை

ந. சி. நஞ்சப்ப செட்டியார் இயற்றியது.

பாயிரம்.

—

பூவரு ஜீவர் புரிகருமத்தாற் போந்திடு
    முடல்பல வெனினும்,
மேவரு மனுட யாக்கைபெற்றிடுதல்
    மிகவரி தரிதென வறிஞர்,
யாவரு முரைத்துங் கேட்டுய வறியா
    வேழையே னிடர்தொலைத்தாள,
மூவரு மாய முதல்வனோர்மனுட
    வேடமுற்றெனவரு மோனன், (1)

அன்னவன் பரவியுலகெலாம் போற்று
    மாதிசங் காராருமரபிற்,
பன்னருங் கோயி லம்பதிப்புனித பரம்பரைக்
    கணியெனப் படர்வோன்,
என்னிரு தயம்விட் டென்றுமே யகலா
    னேற்றமார் வித்வவாசிரமன்,
றன்னருமேனி சாதுவாமி ரங்கசாமியெனும்
    பெயர் தரித்தோன், (2)

இத்தகைய வறிஞனடி யிணைபரவி
    யெந்நாளு மேத்திவாழும்,

தத்திவரு தபனனெழு தனிப்புரவி
நாட்படு தண்டலைபாற் சார்ந்து,
நத்துயிர்க்கு முத்தினத்தை நனிசிதறி
க்கரையிடறி நண்ணி னேனை,
சுத்தகுண மேமலியத் தூய்தாக்குங்
காவிரியாற் சூழப்பெற்ற, (3)

குமரநகர் வேதாந்த மடத்தபிமானியர்
பவமாங் குரவை தாண்டி,
யமரர்சாந்தி யெளிதடைய வாக்குமொரு
நூல்பகரென் றடியிற்றாழப்,
பமரமலர் பலதுழவிக் கூட்டியதேன்
கூடேபோற் பண்டைவேதத்,
தமரரிய வுபநிடத மாதியநூற் சுவை
கவர்ந்தொன் றமைத்தான் மன்னே. (4)

நூற்பெயர் சிவோகசிர வணமென்னுங்
கட்டளையிந் நோன்மைத்தாய,
சாற்றரிய சொற்சுவைசேர் தனியினூ
விருப்புசிப்போர் சமர்மேற்றாக்கும்,
வேற்புரையுங் கண்மடவார் வித்தமுதற்
புத்திரமூ வேட்கையாய,
மாற்புகுதார் மெஞ்ஞான வாயில் வழி
மோக்கசுக வாரி சேர்வார். (5)

இந்நூலாசிரியர் மாணாக்கர் கொமாரபாளையம்
தே. ர. அரங்கநாதக் கவிஞர் குமாரர்
வெங்கட்டராம செட்டியார் இயற்றிய

சாத்துக்கவி வெண்பா.

தானஞ் சொரியுஞ் சருகட்டந் தாவளநேர், மான வரிகண்டு மாய்ப்பதென—மோனநிலை—கூட்டு சிவயோகக் கோதில் சிரவண நூல், வாட்டு மயலிரிய மாய்த்து. (1)

இந்நூலாசிரியர் மாணாக்கருள் ஒருவராகிய கொமாரபாளையம்
ரு. ந. கி. திருமலைசாமி செட்டியார் இயற்றிய

சாத்துக்கவி வெண்பா.

பாச மகற்றிப் பயங்காட்டல் போறபஞ்ச, கோசந் தகர்த்தறிவைக் கூறுநூல்—ஈசனருள்—வேதத் தொளிர் பொருளை மேலவர்க்குக் காட்டு நூல், ஓதற்குயர்வுடைத்திந் நூல். (1)

இந்நூலாசிரியர் மாணாக்கர்
பா. லக்ஷ்மண செட்டியார் இயற்றிய

வெண்பா.

அருளே யுருவா யமர்ந்திடு மோனக், குருவரங்கசாமிதமிழ் கூறுஞ்—சுருதியுரை—சித்த சிவோகச்சிரவணக் கட்டளை, முத்திக்கு மூலமேயாம். (1)

ஜகத் குருபீடம் கோவிலூர்
நியாய சந்திர வேதாந்த பாஸ்கர ஸ்ரீமத் மகா
மண்டலேஸ்வர
வீர சுப்பய்ய ஞானதேசிகேந்திர சுவாமிகள்
மாணாக்கராகிய பவானி
ஸ்ரீமத் பிர்ம்மானந்த சுவாமிகள்
குமாரராகியும் நூலாசிரியர் மாணாக்கருமாகிய
குமாரபாளையம்
தே. ர. வெங்கட்டராம செட்டியாரியற்றியது
சாத்துக்கவி. வெண்பா.

கேசரிகாண் வேழம்போற் கேடடையு மஞ்ஞானம்
பேசுவே தாந்தம் பிறப்பிடமாம்—பாசமறுஞ்
சிட்டர் பவந்தீர் சிவோக சிரவணக்
கட்டளையாம் சிங்கத்தைக் கண்டு.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

நித்தியசா தனங்களெலாம் நிறைந்துபவக்
குரவையது நீந்தி மேலாஞ்
சித்திபெருஞ் சிவயோக சிரவணத்தின்
கட்டளையைச் செப்பினன்சீர்
தத்வமசி முப்பதத்தின் தார்ப்பரியம்
விரித்துரைத்தெந் தாபந் தீர்த்தோன்.
சத்துவசற் குணமோன சாதிரங்க சாமியாந்
தவத்தின் மிக்கோன்.

நூலாசிரியர் மாணாக்கராகிய குமாரபாளையம்

வ. ப. வருதப்ப செட்டியாரியற்றியது.

சாத்துக்கவி. வெண்பா.

சீரார் சிவோக சிரவணக் கட்டளையால்
போராப் பவமதைப் பேர்த்திட—ஏரார்
மவுன விரங்க சுவாமி மகாத்மா
புவனமுய வீந்தான் புனைந்து.

நூலாசிரியர் மாணாக்கராகிய குமாரபாளையம்

ல. வெ. பெருமாள்சாமி செட்டியாரியற்றியது

சாத்துக்கவி. வெண்பா.

சித்தாஞ் சிவோக சிரவணக் கட்டளை
முத்தி யளிக்கவிது மூலமாம் அத்துவித
மோன விரங்க சுவாமி முனிவரன்
ஞானிதைச் சாற்றினன் ஞன்.

விருத்தம்.

இருளகற்றுஞ் ஞாயிரெனயிவ்வுலகிற்
பாமரர்க ளிதயமெய்தும்,
மருளோட மௌனநிலை மாவித்வச்
சந்யாசா மரங்கசாமி,
சுருதிமொழி பொருளனைத்துஞ்
சோர்வின்றிச் சங்கிரகமாகக் கோர்த்து,
கருணையினார் சிவோக சிரவண
மென்னுங் கட்டளையைக் கழறினானே, (2)

பாயிரம் முற்றிற்று

அவையடக்கம்.

பானு வந்துல கைப்பகல் செய்வதை
மானு மென்றெணி மின்மினி வந்தென
ஞான முற்றறி வாகுந லோர்முனம்
யானு மித்தை யெடுத்திசைத் தேனரோ,

உ

சிவம்.

ஓம் பிரம்மணே நம :

ஸ்ரீ சிவோக சிரவணக் கட்டளை.

மங்கலம்.

பிரம்மாமுதல் ஸ்தம்பமீராயுள்ள சர்வஜீவர்களி னிருதயத்தி லநுசூதமாயிருந்து அவரவர் புண்ணிய பாவத்திற்கேற்க சுகதுக்கத்தை ஈபவராயும் பஞ்சகிருத்திய விவர்த்த உபாதான காரணராயுமுள்ள பரமாத்மா எதுவோ அது நான்.

விவர்த்தமேன்றது.

அதிஷ்டானத்தின் விஷமசத்தையுடைய அந்நிதா சொரூபத்தை விவர்த்த மென்பர்.

அதிஷ்டானத்தின் விஷமசத்தை என்றது—அதிஷ்டானம் பரமாத்மா அது பாரமார்த்திகசத்தை.

விஷமசத்தை என்றது, அதற்கு வேறுபட்டசத்தை. அது வியாவகாரிகசத்தை அது பஞ்சபூத பௌதிகம்.

அந்நிதா சொரூபமென்றது—பரமாத்மா நிர்விகாரம் தேகாதி பிரபஞ்சம் விகாரம், இவ்வித விவர்த்த பிரபஞ்ச காரணபரமாத்மாவை, விவர்த்த உபாதான காரணமென்பர். இக்காரணத்தால் பரமாத்மாவுக்கு யாதொரு ஹானியின்றாம்.

திருஷ்டாந்தம் மந்தாந்தகாரதோஷத்தால் கயிற்றின் பால் சர்ப்பம் தோற்றினும் அச்சர்ப்பத்தால் ரஜ்ஜு கெடாதது போலும். ஊஷரபூமியில் ஜலம் தோற்றுவதால் அப்பூமி நனை யாததுபோலும். ஸ்படிகத்தில் செம்மைநிறம் தோற்றினும் அதின் வாஸ்தவ வெண்மை மாராததுபோல் பரமாத்மாவுக்கு விவர்த்த உபாதானகாரணத்தால் ஹானியின்றாம்.

பரிணும உபாதான காரணத்தால் விகாரமுண்டாம் அது மாயையாம்;

பரிணும உபாதான காரண மிதுவாம்.

அதிஷ்டானத்தின் சமசத்தையுடைய அந்நிதா சொரூபத்தை பரிணும மென்பர், அதாவது பால் தயிருக்கு அதிஷ்டானம், அது வியாவகாரிகசத்தை தயிரும் வியாவகாரிகசத்தை ஆனதால் சமசத்தை என்றார்;

அந்நிதா சொரூபமென்றது, பாலுக்கு தயிர் வேறு வடிவம் இதுபோல் தாஷ்டாந்தம், மாயை ஜெகத்திற்கு பரிணும உபாதான காரணம், பரமாத்மா விவர்த்த உபாதான காரணம்,

அது நான் என்றதால் தொம்பத லக்ஷியமான அந்தராத்மாவுக்கு வேராகாத தத்பத லக்ஷியமான பரமாத்மா தனது சொரூபமென்று சூசிக்கப்பட்டது,

இந்நூலுக்கு சிவோக சிரவணக்கட்டளை யெனப்பெயர் கூறியது எதனால்?

ஆத்ம சொரூபமாகிய தன்னிடத்தில் அத்தியாசமாகத் தோற்றிய. நான் கர்த்தா. போக்தா. சுகி. துக்கியெனல் முதலிய ஜீவவேறுபாடுகளை. நான் அகர்த்தா. அபோக்தா. அசங்கன். சின்மாத்திரன் என்னும் சிவோக ஞானத்தால் வாதித்து தன்னைச் சச்சிதானந்த சிவசொரூபமாகத் தரிசித்தற்குரிய முறையைக் கிரமமாகப் போதிக்கின்ற நூலாம்,

ஆத்மாவை தரிசித்தல் என்றதில், இவ்வித சங்கையுண்டாம், அதாவது, ஆத்மா சுயம் வேதனம், பரவேத்தியமென்றது பொருந்தாதாம், ஏனெனில், (யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்பிய மநஸா ஸஹ) எதனிடத்தில் வாக்கு செல்லாமல் திரும்பி நஷ்டமாகிறதோ, மனதால் எதை அடையமுடியாதோ அது ஆனந்தம் பிரம்மரூபம் என்னும் சுருதிக்கு விரோதமாம்,

அதாவது ஆத்மா வாக்கிற்கும் மனதிற்கும் அவிஷயமாம், சமாதானம், அச்சுருதியின் கருத்திதுவாம், பதத்தின் அர்த்தத்தை அறிவதான சத்தி விருத்தியால் அறியப்படாததாம், பாகத்தியாக லக்ஷண விருத்தியால் அறியப்படுவதாம்,

மனதினல் பரமாத்மாவை அறியலாமென்று சொன்ன சுருதியின் கருத்திதுவாம், பலத்தோடு கூடிய விருத்திக்கு ஆத்மா விஷயமன்றும், அதாவது கருத்ருத்வத்தோடு கூடிய விருத்திக்கு விஷயமன்றாம், ஆனால் கருத்ருத்வம் விடுபட்ட கேவல அகம் பிரம்மாஸ்மி என்னும் விருத்திக்கு ஆத்மா விஷயமாம்,

அவ்விருத்தியும், தீபம் கடபடாதிகளை பிரகாசிப்பிக்கிறது போல் பரமாத்மாவை பிரகாசிப்பிக்கிறதின்றும், மற்றோ மேகத்தால் மறைபட்ட சூரியன் அம்மேகத்தை சண்டமாருதம் விலக்கின் சூரியன் சுயம்பிரகாசமாதல் போல, அஞ்ஞானத்தால் மறைபட்ட பரமாத்மா அவ்வஞ்ஞானத்தை சிவோஹமென்னும் விருத்தி நாசமாக்கில் பின் ஆத்மா சுயம்பிரகாசமாம் அவ்விருத்திக்கு விஷயமன்றும் அவ்விருத்தியும் சவம் சுடுதடி போற்போம்.

இச்சாத்திரத்துக்கு அனுபந்தங்களாவை, விஷயம், சம்பந்தம், பிரயோசனம், அதிகாரி என நான்காம், இச்சாத்திரத்துக்குள்ள விஷயம் யாது, ஜீவப்பிரம்ம அபேதம், விஷயமாம்.

சம்பந்தம் யாது

பிராதிபாதக பிராதிபாத்திய பாவசம்பந்தம், பிராதிபாதக மென்றால் சொல்லுவது, பிராதி பாத்திய மென்றால் சொல்லப்படுவ்து, சொல்லுவது கிரந்தம் சொல்லப்படுவது பிரம்மம், அதுவே சம்பந்தமென அறிக.

இச்சாத்திரத்துக்குப் பிரயோசனம் யாதெனில், துக்கநிவிருத்தி, சுகப்பிராப்தி மயமாகிய மோக்ஷம் பரமப்பிரயோசனமாம்.

இந்நூலுக்கு அதிகாரி யாவன்.

மலம், விக்ஷேபம், ஆவரணம், என்னும் மூன்று தோடங்களில் மலவிக்ஷேபமின்றி ஆவரண தோடமாத்திரமுள்ளவனும், சாதன சதுட்டய சகிதனும், யுத்திசாமர்த்திய புத்திமானும் இருப்பவன், இவன் சாத்திர விசார மூலமாக ஆத்ம

ஞானத்திக்கும், ஆத்ம ஞான மூலமாக மோக்ஷத்துக்கும் அதிகாரியாவனென அறிக.

மலதோடமாவது யாது

மலம் என்பது—பாவம், அது-தான் பூர்வ ஜன்மங்களிற் செய்த நிஷித்தகன்ம பலமாகச் சித்தத்திற் பொருந்தியுள்ள பாவ சம்ஸ்காரமாகிய அசுபவாசனைகளாம்,

(மலதோடம் யெதனுல் நிவிருத்தியாகும்) சகல ஜீவர்களிடத்தில் கிருபையினுலும், வேதாந்த சிரவணத்தால் நிவிருத்தியாகு மென அறிக—மலதோஷம் இந்திரிய விஷயமன்ரும், அது எஙஙன மறிவதெனின்—பாவப் பிரவிருத்தியால் மலதோஷமுளதென் றனுமானம், அவ்வனுமான மிதுவாம்.

யாண்டாண்டு பாவப்பிரவிருத்தியுண்டோ வாண்டாண்டு மலதோஷமுண்டு—பிறதிஞ்ஞை. மலதோஷமின்றி பாவப்பிரவிருத்தி யுண்டாகாது—பாவப்பிரவிருத்தி ஹேதுவால்.

மல தோஷ முண்டு—ஹேது—துஷ்ட புருஷரைப் போல—திருஷ்டாந்தம். துஷ்ட புருஷர் பாவப் பிரவிருத்தி செய்வதால். அவரிடம் மலதோஷம் பூரணமா யிருப்பதால் துஷ்ட புருஷரை திருஷ்டாந்தமாய் சொல்லப்பட்டது...... எதிர்மறையில்,

யாண்டாண்டு மலதோஷமில்லையோ ஆண்டாண்டு பாவப்பிரவிருத்தி இராது—என்பது பிரதிஞ்ஞை—பாவப்பிரவிருத்தியில்லாமையால் மலதோஷமில்லை—என்பது ஹேது—அதிகாரியைப் போல. என்பது திருஷ்டாந்தம்.

விக்ஷேபதோஷம் யாது

காமக்ரோதாதிகளை மேலும் மேலும் சிந்தித்தலாகிய சித்தசலனமாம்.—எதனால் நிவிருத்தியாகு மென்றால்—குருத் தியானம் வேதாந்த சிரவண முதலிய சாதனங்களால் நிவிருத்தி யாகும்.

ஆவரணதோடமாவது யாது.

உருவ விஷயங்களை அந்தகாரமும், சூரியனை மேகமும், சலத்தைப்பாசியும், மறைதிருப்பது போலச் சுயம்பிரகாச மாகிய ஆத்மாவை அறியக்கூடாத வண்ணம் மறைத்திருப்ப தென அறிக.—இஃதெதனால் நிவிருத்தியாகுமெனின்—அந்த காரஞ் சூரியோதயத்தால் நிவிருத்தியாதல்போல ஞானோதயத் தால் நிவிருத்தியாகுமென அறிக. அநுபந்தம் முற்றிற்று.

சாதனசதுஷ்டயம் யாது.

நித்யாநித்திய வஸ்துவிவேகம். இகாமுத்திரார்த்தபல போக விராகம். சமாதிசட்கசம்பத்தி முமூட்சுத்துவம் ஆகிய நான்காம்

இவைகளில் நித்தியாநித்திய வஸ்து விவேகம் யாது. நித்தியமாகவும் சலனரகிதமாகவுமுள்ளது பிரம்மமெனவும், அநித்தியமாகவும் சலனமாயுமுள்ளவை தேகாதிப் பிரபஞ்சங் களெனவும்—அன்னம் பாலையும் நீரையும் பிரிப்பது போலப் பிரித்துப்பார்ப்பது விவேகமாம்.

பிரம்மம் நித்தியம் தேகாதிப்பிரபஞ்சம் அநித்தியமென் பது யாதினால்? பிரம்மம் காரணமாயும் அகண்டமாயும் அவ

யவ ரகிதமாயும் அதிருசியமாயும் உற்பத்தி நாசமின்றியதாயுமி ருத்தலால் நித்தியமெனவும். தேகாதிப்பிரபஞ்சம் பிரம்மத்தின் காரியமாயும் நாசமுடையதாயுமிருத்தலால் அநித்திய மெனவுங்கூறியதெனஅறிக.

பிரம்மம் நித்தியமென்பதற்குப்பிரமாணம், நித்தியாநித்திய வஸ்துவின் சிந்தனம்—பிரம்மப்பிரளயகாலத்தில் பன்னிரண்டு சூரியர்களும் உதயமாய் நூறு வருடம் மழைக்கிரணத்தையும், பனிக்கிரணத்தையும், அடக்கிக்கொண்டு உஷ்ணக்கிரணத்தாலெரித்துப்பிருதிவியாதிய சகலப்பிரபஞ்சங்களையும் பஸ்பம் பண்ணி ஆதிசேடன் மகுடங்களையும் பஸ்பம் பண்ணி அக்கினிமாத்திரமாகச்சொலிக்கும். அப்போது அவ்வக்கினியினின்றும் சப்த மகா மேகங்களும் பிறந்து நூறு வருடம் யானைத்துதிக்கைபோல வருஷதாரைகளை வருஷிக்க அதனுல் எங்கும் சலமயமாகவே நிறைந்து முன்பக்கினியினு லெரிப்பட்ட பூமியாதிய பிரபஞ்ச பஸ்பங்களைக்கரைத்துத்தன் மயமாக்கிக்கொண்டு பிரளய கால மகோததியாகி வாயுத் தம்பனத்தால் நிற்கும் அங்ஙனம் நிற்கும் ஜலத்தில் ஊழித் தீயாகிய வடவானலம் பிறந்து அச்சலங்களையெல்லாம் கிரகித்து விட்டு உகாந்த காலப்பிரசண்டவாயுவி லணைந்துலீனமாம். அவ்வாயுவும் மகாகாயத்தி லோய்வுற்று லீனமாம். அவ்வாகாயமும் அஞ்ஞானத்தில் லீனமாம். அவ்வஞ்ஞானமும் மாயையும் பிரம்மத்தில் லீனமாம். பிரம்மம் ஒன்றினுலும் லீனமாகாமல் எப்போதும் சேடித்து நிற்கும்பொருளெனச் சாத்திரங்கள் கூறுகின்றமையால் பிரம்மமொன்றுமே நித்தியம்தேகாதிப்பிரபஞ்ச

மனைத்தும் அநித்தியமெனச் சித்தத்தில் மாறுபடாமல் திடமாயிருத்தலே நித்தியா நித்திய வஸ்துவிவேகமாம்.

இகாமுத்திரார்த்த பலபோக விராகம் யாது

இவ்வுலகமுதற் பிரம்மலோக பரியந்தமாகிய, சிற்கு சந்தனவனிதை, அவ்வுலகின் அப்சரஸ்ஸ்ரீ அமுதமுதலியபோகங்களை வாந்தசனம் போல வெருப்புறுதல்.

அவா அஞ்ஞானத்தாலுண்டாம். அவா வின்மை அஞ்ஞான நிவர்த்தியா லுண்டா மென்பர் சில நூலாசிரியர், அது நலமுடையதன்றும். ஏனெனின், ஒருவன் படோற்பத்தி எதனு லுண்டாகு மென்ற கேள்விக்கு—பருத்தி பீஜத்தா லுண்டாகு மென்று சொன்னதுபோலும், இந்த படநாச மெதனு லாகு மென்ற கேள்விக்கு, பீஜ நாசத்தாலாகு மென்று சொன்னது போலுமாம்;

இச்சமாதானம் பாலர்களும் பரிகசித்திற் கிடமாம;

ஆனல் படோற்பத்தி காரண மிதுவாம், நூலின் சம்பந்தமாம்—படநாச காரண மிதுவாம், நூலின் சமபந்தம் நீங்குதலே படநாச காரணமாம்.

இதுபோல் அவா யாதினு லுண்டாகும்?

பூர்வ அனுபவ வுற்பூத சமுஸ்காரத்தா லுண்டாகும்.

சமுஸ்காரத்தா லுண்டாகு மென்றால் போதும்; பூர்வ அனுபவ வுற்பூத பத மெதற்கு?

சமுஸ்காரத்தா லுண்டாகு மென்றால், சிசுவுக்கும் சுழுத்தியிலும் சமுஸ்கார மிருந்தும் அந்த சமுஸ்காரம் அடங்கி

இருத்தலால் இச்சை உண்டாகவில்லை என்று சங்கை யுண்டாம், அது நிவர்த்திக்காக பூர்வ அனுபவ வுற்பூத பதம் சேர்க்கப்பட்டது.

அவா வின்மை எதனு லுண்டாகும் ?

பூர்வ பிரதிகூ லானுபவ வுற்பூத சமுஸ்காரத்தால் உபரதி உண்டாம்.

யாண்டாண்டு பிரதிகூ லானுபவ முண்டோ வாண்டாண்டு உபரதி யுண்டாம். யாண்டாண்டு பிரதிகூ லானுபவ மின்றோ வாண்டாண்டு உபரதி இன்றாம். விராகனைப் போல்.

இதன் சார மிதுவாம். அவாவும், அவா வின்மையும், அனுபவ பாவ ஞதீனமாம்.

சமாதி சட்க சம்பத்தி யாவது யாது ?

சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை, ஆறும்—சமமாவது, அந்தக்கரண தண்டம்—அதாவது—திரிகாலத்தைப் பற்றி எழாநின்ற மனதை, சென்ற காலத்தை நினைப்பதால் யாதொரு பிரயோஜன மில்லை என்றும்; வருங் காலத்தை நினைப்பதால் திரேக மனித்திய மென்றும்; வர்த்தமான காலத்தை நினைப்பதால், (நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்ப கோடி சதைரபி) என்னும் சுருதி—அதாவது—கோடி கர்ப்ப காலமான போதிலும் நாம் செய்த புண்ணிய பாவங்கள் அனுபவிக்காமல் நசிக்கிறதில்லை. ஆனதால் பிராரத் தத்தின்படி நடக்கிறதென்றும், இவ்வித விவேகத்தால், மனதை பாகியத்தில் விடாமல் சிரவணத்தின் கண் நிருத்துவது சமமாம்.

தமமாவது—பஞ்சேந்திரியங்களையும் பஞ்ச விஷயங்களில் செல்ல வொட்டமல் தகைதலாம்.

விடலாவது—ஸ்திரீ தனம் சாதி யபிமான முதலிய சாமக்கிரிகளோடு பொருந்திய சகல கருமங்களையும் பரிசியாமல் தியாகம் செய்தலே உபரதியாம்.

சகித்தலாவது—காம முதலியவை பூர்வ வாசனையினுல் அந்தக்கரணத்தில் எழுமாயின் விவேகத்தால் அவற்றை விரிய விடாமல் அடங்கச் செய்வது. பசி தாகம் சீதோஷ்ணாதிகளை பொருத்துக் கொள்வதையும் சகித்த லென்பர்.

சமாதான மாவது—பெரியோர்க ளிடத்தில் கேட்ட ஞான சாஸ்திரங்களை அநுபவத்திற்கு வரும்படி சிந்திக்கின்றது சமாதானமாம்.

சிரத்தை யாவது—உத்கிருஷ்டமான ஞானசாரிய ராலும் ஞான சாஸ்திரங்களாலும் உபதேசிக்கப்பட்ட வாக்கியங்களில் இவை சத்தியமா மென்று விசுவாசம் வைத்தலாம்.

முமூட்சுத்துவ மாவது யாதெனின்—நித்திய மாகிய மோக்ஷத்தை மாத்திரம் அதி தீவிரமாக விரும்புதலாம்.

பிரம்ம விலக்ஷணம் (நூல்.)

சுத்தப்பிரஹ்மமா யிருக்கின்ற சர்வ சாக்ஷியி னிடத்திலே—சுத்த மென்றல் யாது? அசுத்த மின்றியது.—

அசுத்த மென்றல் யாது? ஜீவேஸ்வர ஜகத்து 35 தத்துவங்களே அசுத்தங்களாம். யெங்ஙன மெனில், தூல சரீர

தத்துவங்கள் 6, சூக்ஷும சரீர தத்துவம் 20, பஞ்ச பூதம் 5, ஜீவன் அவித்தை 2, ஈசுவரன் மாயை 2, ஆகிய இவைகளாம்.

தூல சரீர தத்துவம் 6 யாது?

சர்மம், உதிரம், மாம்சம், சனுயு, அத்தி, மச்சை.

சூக்ஷும சரீர தத்துவம் 20 யாது?

ஞானேந்திரியம் 5, கர்மேந்திரியம் 5, பிராணுதி வாயுக்கள் 5, அந்தக்கரணம் 4, உள்ளம் 1.

ஞானேந்திரியம் 5 யாது?

சுரோத்ரம், தொக்கு, சக்ஷு, ஜிகுவை, ஆக்ராணம்.

கர்மேந்திரியம் 5 யாது?

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம்.

பிராணுதி வாயுக்கள் 5 எவை?

பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன்.

இருதயத்திலிருந்து உசுவாச நிசுவாசம் செய்வது பிராணன். குதஸ்தானத்திலிருந்து மல ஜலங்களை கழிப்பது அபானன், உந்திஸ்தானத்திலிருந்து உண்ட அன்ன ரசங்களை சர்வ நாடிகளுக்கும் பகுத்துக் கொடுப்பது சமானன். கண்டத்திலிருந்து உண்ட அன்ன பானுதிகளை உள்ளே தள்ளுவது உதானன். சரீர மெங்கும் வியாபித்து சரீரத்தை தாங்குவது வியானன்.

பஞ்ச பூதம் 5 எவை?

பிருதிவு, அப்பு, தேயுவு, வாயுவு, ஆகாசம்.

அசுத்த லக்ஷண மென்றது யாது?

விவேகிகளால் அருவருக்கத் தக்க அசத்து, சடம், துக்கம், அநித்தம், கண்டம், ஜனித்தல், பருத்தல், இளைத்தல், திரை, நரை, வியாதி, துர்கந்தம், மரித்தல் முதலிய விசேஷணங்களோடு கூடிய தூல சரீரத்தில் நவத் துவாரங்களிலும் மலம் ஒழுகுதலே தூல சரீரத்துக் கசுத்தயமாம்.

20 தத்துவமாகிய சூக்ஷும சரீரம் அசுத்தி முடையதென்றது எதனுல்?

இராகத் துவேஷாதி 13 குணங்களே அசுத்தமாம.

எவை யெனின்—இராகம், துவேஷம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மச்சரம், ஈரிஷை, அசூயை, இடம்பம், தருப்பம், அகங்கார மென்னும் 13-ம்.

இராக மாவது—பரஸ்திரீ கமனம் பண்ண வேண்டு மென் றெழாநின்ற சித்தவிருத்தி.

துவேஷமாவது—தனக்கு அபகாரம் பண்ணினவனுக்கு பதி லபகாரம் பண்ண வேண்டு மென் றெழாநின்ற சித்த விருத்தி.

காமமாவது—ஈஷணத் திரயங்களே மேலும் மேலும் சம்பாதிக்க வேண்டு மென் றெழாநின்ற சித்தவிருத்தி.

குரோத மாவது—தனக்கு வேண்டிய காரியத்தில் விரோதஞ் செய்தவ னிடத்தி லாக்கிரகமாக எழாநின்ற சித்த விருத்தி.

உலோபமாவது—தான் சம்பாதித்த பொருளை ஒருவருக்கும ஒன்றும் கொடுக்கக் கூடாதென் றெழாநின்ற சித்தவிருத்தி.

மோகமாவது—தான் சம்பாதித்த பொருளில் அனுபவிக்க வேண்டுமென்று பிரிய மெழாநின்ற சித்தவிருத்தி.

மதமாவது—ஐசுவரிய கோலா கலத்தினல் செருவித்தெழாநின்ற சித்தவிருத்தி.

மற்சரமாவது—தனக்குச்சமம் அல்லது அதிகமான சம்பத்துள்ளாரைக்கண்டு சகிக்காமலெழாநின்ற சித்தவிருத்தி.

ஈரிஷையாவது—தனக்கு வந்த துக்கம் பிறருக்கு வாலாகாதா என்றெழாநின்ற சித்தவிருத்தி.

அசூயையாவது—தனக்கு வந்த சுகம் பிறருக்கும் வாலாமா என்றெழாநின்ற சித்தவிருத்தி.

இடம்பமாவது—தான்செய்த தருமத்தை சகலரும் பார்த்து மிகவும் நன்ருயிருக்கிறதெனத் தன்னைப்புகழவேண்டுமென்றெழாநின்ற சித்தவிருத்தி.

தருப்பமாவது—தனக்குச்சமமாக ஒருவருமில்லை என்றெழாநின்ற சித்தவிருத்தி.

அகங்காரமாவது—அடா என்னை அறியாயா நான்பிடித்த காரியத்தை விடுவேனு நீயா எனக்குப்புத்தி சொல்லுகிறவன் என்றெழாநின்ற சித்தவிருத்தி.

ஆகிய இவைகளே சூக்ஷமசரீரத்துக்கு அசுத்தங்களாம்.

அஞ்ஞானம் அசுத்தமுடையது என்றது யாது?

ஆத்மாவை மறைப்பதாலும், பிரஹ்மாத்மைக்கிய ஞானத்தாற் கெடுதலினுலென அறிக.

ஜீவன் அசுத்த முடையனென்பது எதனுல்?

ஜாதி, வர்ணம், ஆச்சிரமம் அதன் தன்மா தன்மம் அதன் பலமான ஜனனமரண தாபத்தரயங்களிர்சுழல் வதினு லென் அறிக.

ஆகாய பூதத்துக் கசுத்தம் யாது?

விக்ஷேப சத்தியிற் ரோன்றிக் கெடுதலும் சத்தகுணத் தோடு இடி காற்று வெயில் மேக முதலியவைகளாம்.

வாயு பூதத்துக் கசுத்தம் யாது?

ஆகாயத்திற்ரோன்றிக் கெடுதலும் பரிசகுணத்தோடு சலித்தலும் தூர்க்கந் தாதிகளை யிழுத்தலுமாம்.

அக்கினி பூதத்துக் கசுத்தம் யாது?

வாயுவிற் ரோன்றிக் கெடுதலும் ரூபகுணத்தோடு புகை பொறி வெப்பமாதிகளை யுற்றிருத்தலுமாம.

அப்பு பூதத்துக் கசுத்தம் யாது?

அக்கினியிற் ரோன்றிக்கெடுதலும் ரச குணத்தோடு அலை திவலை நுரை கலங்கல் சேறு பாசியாதிகளை யுற்றிருத்த லுமாம்.

பிருதிவி பூதத்துக் கசுத்தம் யாது?

அப்புவிற் ரோன்றிக் கெடுதலும் கந்தகுணத்தோடு

மலம் மூத்திரம் குப்பை சேரி மயானாதிகளையுடையதாயிருத்த லுமாம்.

மாயைக் கசுத்தம் யாது ?

காரணமின்றியதாகவும், அநிர்வசனீயமாயும், ககனாரவிந்தம் போல, காலத்திரயத்திலு மில்லாததாயும், பிரம்மாத்மவைக் கிய ஞானத்தாற் கெடுதலினாலாம்

ஈசுவரனுக் கசுத்தம் யாது ?

தான் தோன்றற்கு மாயையே காரணமாகவும், சிருஷ் டியாதி பஞ்சகிருத்தியங்களே காரியமாகவும், பிரஹ்மாத்ம வைக்கிய ஞானத்தால், மாயை கெடும்போது பிரஹ்மத்தில் லயமாதலே அவதியாகவும், பிரஹ்ம, விஷ்ணு ருத்திர ராதி மூர்த்தமாக ஆவிர்ப்பவித்தலே பலமாகவு மிருத்தலினாலாம்.

இத்தன்மை அசுத்தமின்றிய நாமே சுத்தம்.

(பதம்) பிரம்மமேன்றால் யாது ?

நித்திய, சுத்த, புத்த, முத்த, சத்திய, பரமானந்த, அத்துவிதம்.

நித்தியமாவது யாது?

பின்னமாகிய எத்தேசத்தினும், எக்காலத்தினும், ஆகாச மொருதன்மைத் தாயிருப்பதுபோலச் சர்வ பிரபஞ்சங் களிலும் பஞ்ச கோசங்களுள்ள விடயங்களில் கோசங்களைக் காண்பதாகி எப்போது மிருத்தலின் நித்தியம்.

சுத்தமேன்றால் யாது ?

அசுத்தமின்றியது.

புத்த மென்றால் யாது?

அந்தக்கரண அறிவைப்போலத் தோன்றித் தோன்றி மறைக்காமல் எப்போதும் ஒரேபடித்தா யிருத்தலினாலென அறிக.

முத்த மென்றால் யாது?

அஞ்ஞானம் அஞ்ஞாதற் காரியமாகிய சகல பாசங்களை யும் விடுபட்டிருத்தலினாலென அறிக.

சத்தியமாவது யாது?

தினம், மாதம், வருடம், காலம், கற்பகங்க டோறும் ஆரோபித மாகத்தோன்றுநின்ற அவஸ்தாத்திரயப் பிரபஞ்சச் சட்கு விலக்ஷணமாய், அவைகளுண்டாதற்கு முன்னும், உண் டாகி அழிந்த பின்னும், மத்தியிலும், தோன்றல், திரிதல், கெடுதலாகிய விகாரங்களையுறாமல் ஒரே பிரகாரமாக விளங்கிக் கொண்டிருத்தலினாலாம்.

பரமானந்த மாவது யாது?

பிரஹ்மாமுதல், தம்ப பரியந்தமுள்ள சர்வஜீவர்களும் அனுபவிக்கப்பட்ட சுகங்களும் தன்னுடைய சுகமானபடியி னால் மிகுந்த பிரீதிக்கு விஷயமானதாலும் நாமே யானந்தம்.

அத்துவித மாவது யாது?

சஜாதீய விஜாதீய சுவகத பேதரகிதமாயிருத்தலினா லென அறிக.

சஜாதீய பேதமாவது யாது?

மரத்துக்கு மற்றோர் மரத்தினோடும், பிராமணனுக்கு மற்றோர் பிராமணனோடு முள்ளசமான, சாதித்துவமாம்.

விஜாதீய பேதமாவது யாது?

மரத்துக்கும், கல்லுக்கும், பிராமணனுக்கும், சூத்திரனுக்கும், மனிதனுக்கும், மிருகங்களுக்குமுள்ள பேதமாம்.

சுவகத பேதமாவது யாது?

மரத்துக்கும் மரத்தைவிட் டகலாதிருக்கும் பத்திர புஷ்பாதிகளேயாம் இங்ஙனம் சஜாதி விஜாதீய சுவகத பேத மற்றது அத்துவிதம்.

(பதம்) (சர்வசாக்ஷியினிடத்திலே) பொருள்

சகலத்தையும் விளக்கிவைத்துக்கொண் டிராநின்ற சாக்ஷியினிடமாக—கருத்திதுவாம்.

தத், துவம், அசி யென்னும் பதத்திரய வாச்சியார்த்த சமுகங்க ளெல்லாவற்றின் தோற்ற வொடுக்கங்களாகிய சகலத்தையும் விளக்கி வைத்துக்கொண்டு தானொரு விகாரமு முறுமலிருத்தலின் பிரஹ்மத்தைச் சருவசாக்ஷி யென்றார். தத், துவம், அசி யென்னும் முப்பதங்கள் எந்த வாக்கியத்தின் பதங்கள்? சாமவேத மகா வாக்கியத்தின் பதங்களாம்.

அந்தப்பதத்தின் வாச்சியார்த்தங்க ளெவை?

தத் என்னும் பதத்திற்கு விராட்டு, இரணிய கருப்பன் அவ்வியாகிருத மென்னும் சரீரத்திரயம்.

சிருட்டி, திதி, சம்மார மென்னும் அவஸ்தாத்திரயம் வைசுவானரன், சூத்திராத்மா, அந்தரியாமி யென்னும் அபிமானித்திரயம் ஆக 9 தத் பதத்திற்கு வாச்சியமாம்

துவம் யென்னும் பதத்திற்கு—தூலம், சூஷ்மம், காரண மென்னும் சரீரத்திரயம், சாக்கிரம, சொப்பனம், சுழுப்த்தி, யென்னும் அவஸ்தாத்திரயம், விசுவன், தைசதன், பிராஜ்ஞன் என்னும அபிமானித்திரயம் ஆகிய 9 தொம் யென்னும் பதத்திற்கு, வாச்சியமாம்.

அசி, யென்னும் பதச்திற்குச் சத்ருபசத்தி, சித்ருப சந்தி ஆனந்தரூபசத்தி யென்னும் சரீரத்தரயம், சருவவியாபகம், சருவப்பிரகாசம், சருவானந்த மென்னும் அவஸ்தாத்திரயம், பரிபூரணன், தேஜோமயன், பரமானந்த னென்னும் அபிமானித்திரயம் ஆகிய 9 அசி என்னும் பதத்திற்கு வாச்சியம்.

இத்தன்மையான நாமே சர்வசாக்ஷியென் றனுதினமுமனுசந்திப்பாய்.

பதம்

அக்கினியில் சூடுபோல அபின்னமாக ஒரு சத்தி உண்டு என்றதால், சொரூப லக்ஷணமென்றும் தடத்த லக்ஷணமென்றிரண்டு விதம். அதாவது—அக்கினி லோகித, உஷ்ணப்பிரகாசமுடையது. ஜலம், குளிர், இளகல், வெண்மை என்பது போலும்; லோகித உஷ்ணப்பிரகாசம் அக்கினியில் எப்பொழுதும் இருப்பதாயும் மற்ற நான்கு பூதங்களினின்றும் வேறு பிரித்து அறிவிப்பதால் சொரூப லக்ஷணமாம். ஆனதால் அக்கினியில் சூடுபோல என்றார். இது பிரஹ்மத்தின் சொரூப லக்ஷணமாம்,

தடத்த லக்ஷணம் யாது?

லக்ஷியத்தில் ஏகதேசமிருப்பதாயும் ஓர்போ திருப்பதாயும் வேறு பிரித்தறிவிப்பது தடத்த லக்ஷணம் அது—காகமுடையது; தேவதத்தன் வீடு, காகம். ஓர் காலத்திலிருந்து மற்ற வீடுகள்நின்று வேறுபிரித் தறிவிப்பதாலாம. இதையே உபலக்ஷணமென்பர்—தாவ்ஷ்டாந்தம். பரமாத்மாவில், ஜீவேஸ்வரஜெகத்து, ஏகதேசமிருப்பதாயும் அதுவும், ஓர் காலத்திருப்பதாய். ஜீவ ஈசுவர சேதனத்தினின்று, இது பிரம்ம சேதனமென்று வேறு பிரித் தறிவிப்பதாலாம்.

தாபத்திரய துக்கம்

ஆதி ஆத்மீகம், ஆதி தெய்வீகம், ஆதி பௌதீகம் ஆகிய மூன்றும. ஆதி ஆத்மீகமாவது— பசி, தாகம், வியாதி முதலியவையாம். ஆதிதெய்வீகமாவது—சீதவாத ஆதபங்களாலுண்டாகக்கூடிய துக்கமாம். ஆதி பௌதீகமாவது—எக்ஷ, ராக்ஷச, சோர, வியாக்கிரம், சர்ப்பம் முதலியவைகளாலுண்டாகக்கூடிய துக்கம்.

அத்தியாரோப நிரூபகம்

பூர்வ நிரூபகத்தில் விளக்கிய, நித்தியமாகிய சுத்த விலக்கணங்களையுடைய பரப்பிரஹ்மத்தில் பிரகிருதிமுதல், தூலசரீர மீறாகிய, தத்துவங்களின்றோற்றமாகிய அத்தியாரோபக்கிரமத்தை நிரூபிக்கின்றார்.

குரு ஸ்துதி

சைதந்யம் ஸாஸ்வதம் ஸாந்தம் வ்யோமாதீதம்
நிரஞ்ஜனம் நாதபிந்து கலாதீதம் தஸ்மை ஸ்ரீ குரவே நம:

அர்த்தம்—சைதந்நியமும், சாசுவதமும், சாந்தமும், ஆகாயத்திற்சுப்பாற் பட்டதும், நிரஞ்சனமும், நாதபிந்து களுக் கப்பாற்பட்டதுமான அந்த ஸ்ரீ குருவிற்கு நமஸ்காரம்.

நாதமாவது—வெண்கல மணியடித்தபின் கலீரென்று உண்டாகும் பொதுச்சத்தம் போன்ற தொடர்ச்சியாகிய சத்தம்.

பிந்துவாவது—அநுஸ்வாரத்திற்குப்பின் உண்டாகும் துவனி.

கலையாவது—நாதத்தின் ஏகதேசம்

மற்றுமோர் பொருள்—நாதம் (சத்துரூபசத்தி) பிந்து (சித்துரூபசத்தி) கலை (ஆனந்த ரூபசத்திக் கப்பாலல்பட்டது).

பதம்

இந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிரஹ்மத்திற், சுத்தியில் ரஜதம்போல மூலப்பிரகிருதி யென்னும் ஒரு சத்தி உண்டு.

அகண்டமாவது—ஒன்றினலும் கண்டிக்கப்படாதது.

பிரஹ்மம் கண்டிக்கப்படாதென்றது எதனுல்?

உலோகாயுத முதலிய புரச்சமயங்கள், வேதானுசார மான கன்ம காண்டத்தினுல் கண்டிக்கப்படும். அவையும் உபாசன காண்டத்தினுல் கண்டிக்கப்படும். அவையும் ஞான காண்டமாகிய வுபநிஷத்துக்களால் கண்டிக்கப்படும். அவ்வுபநிடதங்களைக் கண்டித்தற்கு அவற்றினும் பிரபல பிரமாணங்களில் லாமையால் அவையே சகல பிரமாணங்கட்கு மேலாகி வேத

முடிவாக விளங்கா நின்ற—உபநிஷத்துக்களால் நிர்ணயிக்கப் பட்ட காமே அகண்டம்.

பரிபூரண மாவது யாது ?

தேச, கால, வஸ்துபரிச்சேதமற்று வியாபகமாக நிறைந் திருப்பதாலெண அறிக—ஒவ்வொரு பொருள்களும ஒருதேசத் திள்ளனவாயும், ஒரு தேசத் தில்லனவாயு மிருத்தலின் அவை தேசததாற் பரிச்சேத முளளனவாகும். அங்ஙனமின்றிப் பிரமமம் சகலதேசங்களினும் அகமகமெயன்ற வியாபகசத்தாய் விளங்கிக்கொண்டிருத்தலினாலாம்.

பிரஹ்மம் காலத்தினுல் பரிச்சேத ரகிதமென்பது எத னுல்? ஒருகாலத்துள்ள சாயும, மற்றொருகாலததில்லாத தாகிய பொருள்கள் காலபரிச்சேத முள்ளனவாகும். பிரஹ்மம் அங் ஙனமின்றி அநாதயாதலின் பூத காலத்தினும, நித்யமாதலின், பௌஷிய காலத்தினும், சத்ரூப மாதலின், வர்த்தமான காலதத்னும் விளங்கிக் கொண்டிருத்தலினுல் பூரணமாம்.

பிரஹ்மம்—வஸ்துவினுலும் பரிச்சேத முறுதென்றது யெதனுல்? மண்கடமாகவும, பொன், ஆபரணமாகவும், வியா பித்து அவ்வவ் வாகாரமாயிருப்பது போல, பிரஹ்மம் தன்னிற் கற்பிதமாகிய சேதனுசேதன வஸ்துக்க ளனைத்தினும் வியாபித் துச் சர்வாத்மகமா யிருத்தலினுலாம்.

(பதம்) சச்சிதானந்தப் பிரம்மத்தினிடத்தில் (பொருள்)

அஸ்தி பாதிப் பிரிய பிரஹ்மத்தினிடமாக சத்தென்றால் யாது?—பூத, பௌஷிய, வர்த்தமான மென்னும் முக்காலத்தி னுமிருப்பது சத்து. எங்ஙனமெனின்.

மந்தாந்தகார தோடத்தால் கயிற்றின்பால் சர்ப்பப்பி ராந்தி தோறறற்கு முன்னும், தோற்று நின்ற காலமான மத் தியிலும், தோற்றி யழிவுற்றபின் முக்காலத்தினும் கயிரு கெடா மல் அவை கட்காதாரமாயிருப்பதுபோல, அவித்தியா மலசா டத்தால் பிரஹ்மத்தின்பால் சேதன சேதனப்பிரபஞ்ச மாகிய 35 தத்துவங்களும் தோற்றற்கு முன்னும், தோற்றுநின்ற காலமானமத்தியிலும், தோற்றியழிவுற்ற பின்னுமாகிய முக் காலத்தினும் பிரம்மம் கெடாமல் அவைகட் காதாரமாயிருத்த லினாலாம்.

சித்தென்பது யாது?

சகலப்பிரபஞ்சங்களையும் விளக்கிவைப்பதாம்.

அதாவது—சூரியன் தீபாதி, சாதனந்தரங்களை, யபே க்ஷியாமல், தானும் பிரகாசமாயிருந்து கொண்டு, தன்னையடுத்த கடபடாதி வஸ்துக்களையும், விளங்கச்செய்வதுபோலப்பிரம் மம் சூரியாதி யஷ்டப்பிரகாசங்களையும் அபேக்ஷியாமல், தான் சுயம் பிரகாசமா யிருந்துகொண்டு தன்னை யடுத்திராநின்ற அவஸ் தாத்திரயப் பிரபஞ்சக ளனைத்தையும் விளங்கச் செய் யும், அறிவாய் விளங்குதலினாலாம்.

சூரியாதி யஷ்டப்பிரகாசங்க ளெவை? சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், அக்கினி, மின்னல், சீவன், புத்தி, இந் திரியங்களென அறிக.

ஆநந்தமாவது யாது?

பரமப்பிரீதிக்கு விஷயமாயிருப்பது ஆநந்தமாம்—ஸ்தரீ

முதலிய விஷயங்களும் பிரியத்துக்கு விஷயமாம் எனில், அவை பரமப்பிரீதிக்கு விஷயமன்று, பாயச முதலிய அன்னம், பூரணமாய் புசித்தவன், மீண்டு அவ்வன்னத்தை படைக்கின் அவனுக்கு பிரியமுண்டாவதன்றும். ஆகையால், அவைகள் மிகுந்த பிரியத்திற்கு விஷயமன்றும்.

சர்வ சுகங்களும் க்ஷணத்தில் நஷ்டமடைவதாம். அது வும் விட்டில் பூச்சி, தீபச்சுடரைப்பார்த்து, இது நமக்கு நல்ல சுகசாதன போகமெனக்கருதி, அதில் ஆவலுடன் விழுந்து மடிவது போலாம்—ஆனதால் பரமப் பிரியத்துக்கு விஷயமா வது பரமாத்மாவாம்.

பிரம்மமென்றால் யாது?

நித்திய, சுத்த, புத்த, முத்த, சத்தியம், பரமானந்தம், அத்வைதம் இத்தியாதி லக்ஷணமுடையது பிரம்மமாம்.

பதம்

சுத்தியில் ரசிதம் போல் மூலப்பிரகிருதி யென்னும் ஒரு சத்தியுண்டு. சுத்தி என்றால்—கிளிஞ்சல். ரஜிதம் என்றால் வெள்ளி. மூலம என்றால்—காரணம். பிரகிருதி என்றால்—உற்பத்திக்கு ஸ்தானம். சத்தியென்றால்—மாயை. மாயை என்றால்—யாமா சாமாய. யா—யாதொன்றானது. மா—இல் லையோ. ஸா—அது. மா—மாயை. எனப்பொருள்படுகின்ற தாம். ஓர் பொருளாக நிலைபெறாமல் அநிர்வசனீயமாயிருத்தலி னலாம.

மாயையை அநிர்வசநீய மேன்றது எதனால்?

சத்து, அசத்து, சதசத்து, சாவயம், நிரவயம், சாவய

நிரவயம், பின்னம், அபின்னம், பின்னாபின்னமாகிய 9 விலக்கணங்களில் யாதேனும் ஓரிலக்கணமுடையதென்று வசனித்தற்குக்கூடாமையினாலாம்.

மாயையை 9 விலக்கணங்களில் ஓரிலக்கணமுடையதாகவேனும் வசனித்தற்குக் கூடாதென்றது எதனால்.

சத்தெனின்—முக்காலத்தினு முள்ளதா யிருத்தல்வேண்டும். அங்ஙனமின்றிப் பிரம்ம ஞானத்தால் நாசமாகின்றமையால் சத்துமல்ல—அசத்தெனின்—வந்தியாசுதன் சச விஷாணம்போல் காலத்திரயத்திலு மில்லா திருக்கவேண்டும். அங்ஙனமின்றி, நாமரூபப் பிரபஞ்சமாகத் தோன்றுகின்றமையால் அசத்துமல்ல—சதசத்தெனின்—சத்து உள்ளது அசத்து இல்லாதது எதிர்மறை யிலக்கணமுடைய இவ்விரண்டும் ஒன்றாயிருக்குமெனல். பகலு மிரவுமொன்றாயிருக்குமெனல் விரோதமானதால் சதசத்து மல்ல.

சாவயமெனின்—அவயவ சகிதமாயிருக்கவேண்டும் கந்தருவசைனியங்களைத் தோற்றுவிக்கும் இந்திர சாலிகன் சத்திக்கும் தீபத்திற் பொறியையுதிப்பிக்கும் தீபசத்திக்கும் வடிவமில்லாமைபோலப் பிரமத்தினின்றும் பிரபஞ்சம் தோன்றச் செய்யும் மாயா சத்திக்கு வடிவமின்மையால் சாவயவமுமல்ல நிரவயமெனின்—அவயவ சகிதமாகத் தோற்றாதிருக்கவேண்டும். அங்ஙனமின்றி அவயவ சகிதப் பிரபஞ்சமாகத் தோற்றுகின்றமையால், நிரவயவமுமல்ல.

சாவய நிரவயமெனின்—இருட்டாதித்தனென்றார்போல ஒன்றுக்கு இரண்டு பக்ஷம் கூடாது ஆகையால். சாவய நிரவயமல்ல—பின்னமெனின்—பிரமத்துக்கு அந்நியமாயிருக்கவேண்

டும். அற்றேல் அத்துவிதத்துக்கு ஹானிவரும் வரினென்னை யெனின் பிரம்மத்தை அத்துவிதம் ஏகமெனக் கீர்த்திக்கும், சுருதியாதிகளுக்கு அப்பிரமாணத்துவமும் அவைகளை வெளியிட்டருளிய ஈசுவரனுக்கு அசத்திய வாதித்துவமும் வரும். இஃதன்றி அக்னிக்கும் சித்திரிகனுக்கும் அந்நியமாகப் பொறியை யுதிப்பிக்கும் சத்திக்கும் சித்திரிக சத்திக்கும் இருப்பில்லாததுபோலப் பிரம்மத்துக் கன்னியமாக மாயா சத்திக்கிருப்பில்லாமையால் பின்னமுமல்ல.

அபின்ன மெனின்—வேப்பிலையும் கசப்பும் போலப் பிரம்மமும் மாயையும் ஒன்றாயிருக்கவேண்டும். ஒன்றாயிருக்கிறதென்றால் விகாரத்துவமுண்டாகும். பிரம்மத்தை நிர்விகாரமென்று சொல்லி இருக்கின்றமையால் அபின்னமுமல்ல.

பின்னா பின்ன மெனின்—எதிர்மறை யிலக்கணமாகிய உஷ்ணசீதம் ஒன்றாயிருக்கிறதெனல்போல விரோத மானதால் பின்னா பின்னமு மல்லவென அறிக.

சுருதியாதிகள் மாயையைச் சத்தாகவாயினும், அசத்தாகவாயினும் சதசத்தாக வாயினும் ஒப்பாவிடின் மற்றியாதாக ஒப்பி விவகரிக்கின்றன? சதசத் விலக்ஷணபாவ பதார்த்தமாக ஒப்பி விவகரிக்கின்றன.

சங்கை—சத்துக்கு விலக்ஷணம் அசத்து. அசத்துக்கு விலக்ஷணம் சத்து. சதசத்துக்கு வேறான ஒரு பாவ பதார்த்தம் இன்மையால், மாயையை சதசத் விலக்ஷண பாவமென்றது பொருந்தா தெனின், அதற்கு சமாதானம் இதுவாம் இங்கே சதத்திற்கு விலக்ஷணமென்னும் சொல்லிற்குப் பொருள், அசத்

தென்பது கருத்தன்று ஆனால் மூன்று காலத்திலும் பாதிக்கப் படாதது சத்து. அதற்கு விலக்ஷணமென்றதால், பாதிக்கத்தக் கது. சத் விலக்ஷணமென்னும் சொல்விற்குப் பொருளாம்.

அசத்திற்கு விலக்ஷணமென்னும் பதத்திற்கு அர்த்தம். சத்தென்பது கருத்தன்று. அசத்தென்பது—ககனாரவிந்தம் போல் சொரூபமில்லாதது. அதற்கு விலக்ஷ மென்றதினால் சொரூபமுடையது அசத் விலக்ஷண மென்னும் சொல்விற்குப் பொருளாம்.

ஒருங்கே இவ்வித அர்த்தமுண்டாம். பாதிக்கத்தக்க சொரூபமுடையது சதசத் விலக்ஷண மெனப்படும்.

சொரூபமென்றதால் ரஜ்ஜு சர்ப்பம் போலாம்.

பாவம் (தோற்றுவது) பாதம் (ஆரோபத்தை அபவா தம் செய்தல்.) இந்தமாயையை பிரகிருதி என்றும் சொல்லப் படும்.

பிரகிருதி என்றால்

சத்வம், ரஜசு, தமசு எனமூன்று குண ரூபமாம்.

சத்வ குணத்தின்றன்மை சமதரிசனம், இச்சைஇன்மை, பொறுமை, உதாரத்தன்மை, ஜீவர்களிடம் கருணை இவை முத லிய சத்வ குணத்தாலுண்டாம்.

இரஜோ குணத்தின் செய்கை யாது?

காமம், குரோதம், பிறர்பொருளை விரும்புதல், நான் வேறு, இது வேறு என்னும் பேதபுத்தி, பரிகாசம் இவை ரஜோ குணத்தின் செய்கையாம்.

தமோகுணத்தின் செய்கை யாது ?

சோம்பல், மயக்கம், அவசியம் செய்யவேண்டிய காரியத்தை மறந்து விடுதல், அவிவேகம் ஈனத்வம், பொய் மொழுதல், பிறரை வருத்தல், கலகம், அறிவின்மை ஆகிய இவைகள தமோகுணத்தின் காரியம.

ரஜஸ், தமஸ் என்னும் இரண்டு குணத்தால் இவ்வுலகத்தும், அவ்வுலகத்தும் துன்பமே.

சத்துவ குணத்தால் இவ்வுலகத்தும், அவ்வுலகத்தும் இன்பமே.

உலகத்திலுள்ள சர்வ ஜீவர்களிச்சிப்பது இன்பமே. ஆனதால் இன்பமான இச் சத்வ குணத்தை அடைய இச்சிப்பீராக. சத்வ குணத்தால், ஆதம தெரிசனம் காதலாமலகம் போலாம்—இங்கு இஃது விசேஷமாம். அவ்வாத்மா சர்வத்தையும் அறிகின்றது. புத்தி முதலியவை அவ்வாத்மாவை யறிவதில்லை. அந்தப் பிரத்யக்பிரம்மம் அறியப்பட்டதினும்வேறும். அறியப்படாததினும் வேறும். அறியப்படுவதனைத்தும் திருசியம். அறியப்படாதது அவித்தை இதையே மாயை என்றும், அஞ்ஞானமென்றும், பிரகிருதியென்றும், அவ்வியாகிருதமென்றும, சத்தி என்றும் இவை முதலிய நாமங்களால் விவகரிக்கப்படும். இதை பரியாய சொற்களென்பர்.

அது அஸ்தம், கரம், பாணி என்பதுபோலாம்.

இத்தன்மைய போதரூப ஆத்மாவாய தன்னிடத்தும், சமுசய முண்டாகுமாயின், சமுசயிப்பவனெவனோ அவனே

நீ, உனது சொரூபம் என்று ஆசாரிய சுவாமிகள் வசனம் பஞ்சகோசமும் கடந்து பார்க்கின்ற பொழுது பாழேவிஞ்சியது என்னும் சொல்லால் பாழாய அபாவத்தை அறியும் அறிவை அவசியம் அங்கீகரிக்கத்தக்கதாம்.

ஆகையால் எல்லாவற்றின் அபாவத்தையும் விஷயம் செய்யும் சாக்ஷியை அறிய மற்ஞோர் அறிவை அங்கீகரிப்பதின் ரும். அங்கீகரிக்கின் அனவஸ்தா தோஷமுண்டாம்.

அனவஸ்தா தோஷமாவது யாது ?

தனது (சாக்ஷி) பிரகாசத்தில் வேறு ஞானத்தின் அபேக்ஷையிருக்குமாயின் அந்த இண்டாவதற்கு வேறு மூன்ருவது சாக்ஷியும், அந்த மூன்ருவதற்கு வேறு நான்காவது சாக்ஷியும் அங்கீகரிக்சப்படுவதால் அளவின்றிய தாரைவடிவ அநவஸ்தையாகிய தோஷமாம்.

கைவல்லிய நவநீதம்

அறிவுக்கு மறிவுசெய்யு மறிவுவே றுண்டென் றெண்ணும்,
அறிவற்ற குதர்க்க மூடர்க் கனவஸ்தை பலமாய்த்தீரும்,
அறிபடும் பொருணீ யல்லை யறிபடாப் பொருணீயல்லை,
அறிம்பாரு ளாகுமுன்னை யனுபவித் தறிவாய் நீயே.

இதன் பொருள்.

கடாதி ஞானத்திற்கும் பிரகாச ரூபமான அறிவைத் தரும் அறிவுக்கு, அறிவு வேறு உண்டு என்று எண்ணும், ஆன்மா சொப்பிரகாச மென்னும் ஞானமில்லாத விபரீத ஞான முடைய மூடர்களுக்கு, அநவஸ்தா தோஷம் பிரயோஜன

மாய் முடியும். ஆனதால் கடபடாதி திருசிய வஸ்துவும் நீ யல்லை அறியப்படாத மாயையும் நீ யல்லை. இரண்டையும் அறியும் அறிவு ரூபம் நீ இததன்மையனான உன்னை ஞாதுரு, ஞானம் ஞேயமாகிய திரிபுடியைவிட்டு சாட்சாத கரிப்பாய் நீயே.

சிருஷ்டி கிரமம்.

மேல் சொல்லப்பட்ட மாயை ஜீவர்களின் கர்மபரிபக்குவ காலத்தில் மூன்று குணத்தோடு கூடிய மாயை தமோ குணப் பிரதானமாகிறது. அது மழைக்காலத்திலுள்ள கரு நிற மான மேகம் போலாம். அதினின்று ஆகாசம், வாயு, தேயு, அப்பு, பிருதிவு இவ்வைந்து பூதங்களுமுண்டாகின்றன. கிரம மாக அதின் குணம் சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்த மென்னும் ஐந்து குணங்களாம்.

தமோகுணப் பிரதானமாயையி லிருந்து சப்தத்தோடு ஆகாய முண்டாயிற்று. ஆகாயத்தினின்றும், வாயு உண்டாயிற்று வாயுவு ஆகாய காரியமாதலால், ஆகாயத்தின் சப்த குணம் தன்குணம் ஸ்பரிசமும் வாயுவிலிருக்கிறது.

வாயுவிலிருந்து தேயுவுண்டாயிற்று, தேயுவில் ஆகாசத்தின் சப்தமும், வாயுவின் ஸ்பரிசமும், தன் குணமான ரூபமும் இருக்கின்றன. தேயுவினின்றும் அப்பு உற்பத்தியாகின்றன. அப்புவில் ஆகாசத்தின் சப்தமும், வாயுவின் பரிசமும், தேயுவின் ரூபமும் தன் குணமான ரசம் இருக்கின்றன.

அப்புவினின்று பிருதிவி உற்பத்தியாகிறது. பிருதிவி

யில் ஆகாசத்தின் சப்தமும் வாயுவின் ஸ்பரிசமும் தேயுவின் ரூபமும் அப்புவின் ரசமும் தன் குணமான கந்தமுமுளது.

ஆகாசத்தில் பிரதித்தொனி ரூப சப்தம் இருக்கிறது.

வாயுவில் ஸீ, ஸீ சப்தமும் உஷ்ண சீத கடினங்களுக்கு வேறான பரிசம் இருக்கிறது.

தேயுவில் புக் புக் சப்தமும் உஷ்ண ஸ்பரிசமும் பிரகாச ரூபமும் இருக்கிறது.

அப்புவில் சிலு சிலு சப்தமும் சீதமான ஸ்பரிசமும் வெண்மை ரூபமும் மதுரமான ரசமுமுளது.

பிருதிவியில் கட கட சப்தமும் கடின் ஸ்பரிசமும் வெண்மை, கருப்பு, மஞ்சள், சிவப்பு, பச்சை முதலிய ரூபங்களும் தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, உறைப்பு, கைப்பு, துவர்ப்பு என்னும் ரசங்களும் சுகந்தம், துர்க்கந்தம் என்னும் இருவித கந்தங்களும் பிருதிவியிலிருக்கின்றன.

இவ்விதத்தால் குணங்கள ஆகாசத்தில் ஒன்றும், வாயுவில் சப்த ஸ்பரிச மிரண்டும்.

தேயுவில் சப்த ஸ்பரிச ரூபம் மூன்றும்.

அப்புவில் சப்த ஸ்பரிச ரூப ரஸம் நான்கும்.

பிருதிவியில் சப்த ஸ்பரிச ரூப ரஸம் கந்தம் ஆக ஐந்து இருக்கின்றது. அவற்றில் ஒவ்வொன்று தன்குணமாகவும் மற்ற குணம் காரணத்தின் குணங்களாகவும் இருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மூலகாரணம் மாயா விசிஷ்டன்.

அதில் சேதனம் அசேதனம் என இரண்டு பாகங்களிலிருக்கின் றன. எல்லா பூதங்களிலும் மித்தியாபாகம் மாயையினது சத் தாஸ்பூர்த்திபாகம் சேதனமாம்.

அந்தக் கரண உற்பத்தி.

பஞ்சபூதங்களின் சத்வ குணாம்சங்கள் சேர்ந்து சத்வ மெனப்படும். அதிலிருந்து அந்தக்கரணமுண்டாம். அந்தக்கர ணம் ஞானத்திற்கு ஹேதுவாம். தேகத்தின் உள்ளிருந்து ஞானத்துக்குச் சாதனமாயிருத்தலால் அந்தக் கரணமெனப் படும். பூதங்களின் சத்வகுண காரியமாயிருத்தலால் அந்தக் கரணத்திற்கு சத்வம் என்பது பெயர். அந்தக்கரணத்தின் பரி ணாமத்திற்கு விருத்தி யென்று பெயர். அது வாய்க்கால் ஜலம் வயலாகாரமாதல் போல, மனோவிருத்தி விஷயாகாரமாதலே பரிணாமமென்பர். அவ்வந்தக்கரண விருத்தி நான்காம்.

பதார்த்தத்தின் நன்மை தீமைகளை நிச்சயம் பண்ணும் விருத்தி புத்தி எனப்படும். சங்கற்ப விகற்ப வடிவ விருத்தி மனமெனப்படும். சிந்தனா விருத்தி சித்தமெனப்படும். நான் என்னும் அபிமான விருத்தி அகங்காரமெனப்படும்.

பிராண உற்பத்தி

பஞ்ச பூதங்களின் ரஜோ குணாம்சத்தினின்றும் பிரா ணனுற்பத்தியாகிறது. அந்தப்பிராணன் கிரியாபேதத்தினாலும், ஸ்தான பேதத்தினாலும், ஐந்து விதமாம்.

எதற்கு இருதயம் ஸ்தானமோ பசி, தாகம், கிரியையோ அது பிராணனெனப்படும.

எதற்குக் குதஸ்தானமோ, மூத்திர மலங்களைக் கீழ்கொண்டு போதல் கிரியையோ அது அபானமாம்.

எதற்கு நாபிஸ்தானமோ, புசிக்கப்படுவதையும் பானம் செய்வதுமான அன்ன ஜலங்களை பசனமாகத்தக்கதாகச் சமப் படுத்துதல் கிரியையோ அது சமானன்.

எதற்கு கண்டம் ஸ்தானமோ, சுவாசம் கிரியையோ அது உதானன்—எதற்கு சரீரமுழுதும் ஸ்தானமோ அன்ன பானுதிகளின் ரசத்தைச் சகலநாடிகளிலும இழுத்துக்கொண்டு போகுதல் கிரியையோ அது வியானன்.

சில விடத்தில் நாகன், கூர்மன், கிருகரன், தேவதத் தன், தனஞ்சயன் என ஐந்து வாயுக்கள் அதிகமாகச் சொல்லப் படுகின்றன. முறையே வாந்தி செய்தல், இமைத்தல், தும்மல், கொட்டாவிடுதல் பிணசரீரத்தை வீங்கச் செய்தல் என்பன அவற்றின் கிரியைகளெனப்படும்.

அபானன், சமானன், பிராணன், உதானன், வியா னன் இவைகள் தனித்தனியே பிருதிவியாதிகளின் ஒவ்வொன் றன் ரஜோகுண அம்சத்தினின்றும் முறைமய உண்டாகின்றன

பிராணன் சலனரூபமாம். ஆகையால் பூதங்களின் ரஜோகுணம்சத்தினின்றும் பிராணனது உற்பத்தி சொல்லப் பட்டிருக்கிறது.

ஞானேந்திரியங்களின் உற்பத்தி

ஒவ்வொரு பூதத்தின் சத்துவகுண அம்சத்தினின்றும், புஞ்ச ஞானேந்திரியங்க ளுற்பத்தியாயின.

ஒவ்வொரு பூதத்தின் ரஜோகுணாம்சத்தினின்றும் ஒவ்வொரு கர்மேந்திரியம் உண்டாகின்றது.

ஆகாசத்தின் சத்துவகுணத்தினின்றும் சுரோத்திரமும்,
வாயுவின் சத்துவகுண அம்சத்தினின்றும் துவக்கும்,
தேயுவின் சத்துவகுண அம்சத்தினின்றும் நேத்திரமும்,
அப்புவின் சத்துவகுண அம்சத்தினின்றும் ரசனையும்,
பிருதிவின் சத்துவகுண அம்சத்தினின்றும் கிராணமும் உண்டாகின்றன. இவ்வைந்தும் ஞானத்துக்குச் சாதனமாயிருத்தலால் ஞானேந்திரியங்களெனப்படுகின்றன.

ஞானம் சத்வகுணத்தால் உண்டாதலால் இவ்வைந்தும், பூதங்களுடைய சத்வகுணத்தினாலுண்டானதாகச் சொல்லப்பட்டன. சுரோத்திரேந்திரியம் ஆகாசத்தின் குணமான சத்தத்தை அறிவதால், அது ஆகாசத்தினின்றும் உண்டானதாகச் சொல்லப்படுகின்றது. அதுபோல எப்பூதத்தின் குணத்தை எவ்விந்திரியம் அறிகிறதோ அப்பூதத்தினின்றும் அவ்விந்திரியம் உண்டானதாகச் சொல்லப்படும்.

கர்மேந்திரிய உற்பத்தி.

ஆகாசத்தின் ரஜோகுண அம்சத்தினின்றும் வாக்கும்,
வாயுவின் ரஜோகுண அம்சத்தினின்றும் பாணியும்,
அப்புவின் ரஜோகுண அம்சத்தினின்றும் உபஸ்தமும்,
பிருதிவின் ரஜோகுண அம்சத்தினின்றும் பாயுருவும்,
அக்கினியின் ரஜோகுண அம்சத்தினின்றும் பாதமும்,
உண்டாகின்றன.

இந்த பஞ்சேந்திரியங்களும் கிரியைக்குச் சாதனமாயிருத்தலால் கர்மேந்திரியங்களெனப்படும். கிரியை ரஜோகுணத்தால் உண்டாதலால் பூதங்களின் ரஜோகுணம்சத்தினின்றும் கர்மேந்திரியங்களின் உற்பத்தி சொல்லப்பட்டது.

இவ்வாறு சூக்ஷ்ம சிருஷ்டி சொல்லப்பட்டது. அபஞ்சீகிருத பூதங்கள் அவற்றின் காரியமான அந்தக்கரணம் பிராணன். கர்மேந்திரியம், ஞானேந்திரியம் என்பவை சூக்ஷ்ம சிருஷ்டியாம். ஆகிய இந்த 20 தத்துவங்களும், தேவர், மநுடர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம ஆகிய ஜீவ கோடிகளனைத்திற்கும் சூக்ஷ்ம தேகமாம

பஞ்சீ கரணம்

ஐந்து பூதங்களுள் ஒவ்வொன்றையும் சமமாக இரண்டிரண்டு பாகம் பண்ணி அவைகளின் ஒவ்வோர் பாதியை வைத்து மற்ற ஒவ்வோர் பாதியை நான்கு நான்கு பாகங்களாக பண்ணி தனது அரைப்பாகத்தை விட்டு மற்றை நான்கு பூதங்களின் அரைபாகங்களோடு நான்கு பாகங்களையும் சேர்க்க தூல பூதங்களுண்டாயின. பஞ்சீ கிருத மகா பூதங்களான இவைகளினின்றும் இந்திரியங்களின் விஷயமான தூலப்பிரம்மாண்டமும், பிரம்மாண்டத்தினுள்ளே பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்திய லோகம் ஆகிய மேலேழு லோகங்களும்

அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்னும் கீழேழுலோகங்களும் ஆகிய

பதிநான்கு புவனங்களும் சீவர்களின் போகத்திற்கு ஸ்தான மான சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உற்பீஜம் என்னும் நால்வகைப் பிறப்பாகிய தேவர், மநுடர், பசு, பக்ஷி, தாவரம் ஆகிய தூல சரீரங்களும் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்டன.

காரணத்துடன் காரியம் கலந்தால் தூலீகரிக்கும் அது காரணமான பாலுடன், காரியமான மோர் கலந்தால் தஷித்தாற் போலாம்.

பஞ்சீகிருத பூதகாரியமாக முன் சொல்லிய தூலசரீரத் தில் பொருந்திய ஜீவனுக்கு விசுவன் என்னும் நாமமாம்.

வியஷ்டி சூக்ஷ்ம சரீராபிமானி தைஜசன், வியஷ்டிகா ரண சரீராபிமானி பிராஞ்ஞன் என்னும் நாமமாம்.

சமஷ்டி தூலதேகத்தில் பொருந்திய ஈசுவரனுக்கு விராட்டென்று நாமமாம்.

சமஷ்டி சூக்ஷ்ம சரீர அபிமானி இரணிய கர்ப்பன்.

சமஷ்டி காரண சரீராபிமானி அந்தர்யாமியாம்.

பஞ்ச கோச விவேகம்

தூலசரீரம், அன்னமயகோசம, சூட்சுமசரீரம் மூன்று கோசமாயிருக்கும் அதாவது பிராணவாயும் கன்மேந்திரியம் கூடி பிராணமய கோச மெனப்படும்.

மனதும் ஞானேந்திரியமுங்கூடி மனோமயகோசமெ னப்படும். புத்தியும், ஞானேந்திரியமுங்கூடி விஞ்ஞானமய கோச மெனப்படும். காரணசரீரம் ஆனந்த மயகோசமாம்.

தூலசரீரத்தை அன்னமயமென்றதற்குக் காரணம், மண்ணால் கட்டிய சுவர் மண்ணால் தோன்றி திதிபெற்று, மண்ணே சொரூபமாயிருத்தல் போல, மாதா பிதாக்களுண்ட அன்னசாரமாகிய சுக்கில சுரோணிதங்களை மாதா கர்ப்பமதில் பிண்டமாகி மேலும், மாதாவுண்ட அன்னரசங்களையருந்திக் காசாணாதி அவயவாகாரமாகிப் பூமியில் சனித்தபின்னரும், அன்னசாரமாகிய பாலையும், அன்னத்தையும் உண்டு, வளர்ந்து பருத்துச் சீவித்து அன்னக்குறைவால் மறிதது நாய், நரி, கழு காதிகளுக்கு ஆகாரமாவதுமன்றி அன்னகாரணமாகிய பூமியில் தானே நஷ்டமாகிறது. ஆகையால் அன்னமயமென்று சொல்லப்படும்.

தூலசரீரத்தை கோச மேன்றது எதனால்?

கத்தியை, உறை மறைத்தல்போல, நான்மநுஷ்யன், நான் பிராஹ்மணன், நான் பிரம்மசாரி, நான் பருத்தேன், இளைத்தேனென அகம்சத்தார்த்தமாகிய ஆத்துமாவை மறைத்துக்கொண்டிருத்தலால் கோசமென்றார்.

சுழுத்திமூர்ச்சை சமாதிகளில் தூலசரீரமிருந்தும், இதம் விருத்திகாணப்படாமையால், எது இதம விருததிக்கு விஷயமோ அது அகம் விருத்திக்கு விஷயமல்லவென்பது துணிபாயிருக்க, என் தேகமென இதம் விருத்திக்கு விஷயமாகின்ற தூலசரீரத்தை, அகம்விருத்திக்கு விஷயமாகிய ஆத்மாவெனல் அத்யாசமாம் இதுவன்றி சர்வஞ்ஞனாகிய பரமாத்மாவால் வெளியிடப்பட்ட சுருதிகள் பிரமாணங்களாம் அவைகளைவிடுத்து அஞ்ஞானத்தால் சனன மரணாதி சம்சாரத்தில் சுழலும் பிராம்

தர்களாகிய லோகாயுதர் கூறியநூல்களை வேதமெனவும், இவ்வாபாச நூல்களுக்கனுசாரமாகிய குயுக்திகளை யுக்திகளெனவும், அது யெதுபோலவெனில், கானலை சலமென்றறிந்தாற்போலவும், கயிற்றை சர்ப்பமென் றறிந்தாற்போல, அனாத்மாவை ஆத்மாவென் றறிந்த அத்யாசானுபவத்தை எதார்த்தானுபவமெனவும், மயங்கி ஆத்மலக்ஷணம் அற்பமேனுமின்றி, அனாத்ம லக்ஷணங்களே அமையப்பெற்ற தூலசரீரத்தை, ஆத்மாவெனக்கூறுதல், உண்மையாகிய சுருதி யுக்தி அனுபவங்களுக்கு விரோதமென்பதே நிச்சயம்.

ஆத்மலக்ஷணங்களெவை அனாத்மலக்ஷணங்களெவை? பூத பௌவஷிய வர்த்தமானமென்னும் மூன்று காலததிலுளளதுசத்து—சகலத்தையுமறிவதுசித்து—பரமப்பிரீதிக்கு விஷயமாவது ஆனந்தம்-கண்டமில்லாதது அகண்டம். விகாரமின்றியது நிர்விகாரம் இவ்வித லக்ஷணமுடையது ஆதமா. இந்தலக்ஷணங்களுக்கு மாறாகவுள்ளது அசத்து, சடம், துக்கம் கண்டம், விகாரம் ஆகிய லக்ஷணங்கள் அனாத்ம லக்ஷணம் லோகாயுதன் யுக்தி—நான் சென்றவருஷம் ராமேஸ்வரத்திலிருந்தேன் இந்தவருஷம் சிதம்பரத்தி லிருக்கிறேன். வருகிறவருஷம காசியிலிருப்பேன் என தூலசரீரததை முன்னிட்டு மூன்று காலத்திலுள்ளதாக விவகரிக்கின்றமையால் சத்லக்ஷணமும் தன்னைப்பற்றியபதார்த்தங்களையும் சிரோத்ராதிகளையும் அறிந்தனுபவிக்கையால் சித்லக்ஷணமும். மனைவி புத்ரதன தான்யாதிகள், தூலசரீரத்துக்கு உபகாரமாமேல் அவைகளில் பிரியமும், அபகாரமாமேல், அவைகளில் அப்பிரியமும் உண்

டாகின்றமையால், அருந்தல் பொருந்தலாதி போகங்களால் சகலரும் தூலசரீரத்தையே, உபசரிக்கின்றமையால் பரமப்பிரீதிக்குவிஷயமாயுள்ள ஆனந்த லக்ஷணமும்.

கரசரணுதி அவயவங்கள் வேறுவேருகக்காணப்படாமல் ஒருசரீரமாக யிருத்தலால், அகண்டலக்ஷணமும். மனுஷ்யனென்பது மாறுபடாதிருத்தலால் நிருவிகாரலக்ஷணமும். நான் பிராம்மணன், க்ஷத்திரியன் என தாளுகவே விளங்குகின்றமையால் தூலசரீரமே ஆத்மா இது லோகாயுதனுடையபக்ஷம்.

வேதாந்த சித்தாந்த மிதுவாம்.

சென்றவருஷம், இந்தவருஷம், வருகிற வருஷம் ஆகிய மூன்று வருஷங்களும் வர்த்தமான காலத்துள் அற்ப காலத்திலும் அற்ப காலமானதால் ராமேஸ்வரத்திலிருந்ததும், காசியிலிருந்ததும் மூன்று காலமாகிய சத்லக்ஷணமன்ரும்.

சிருஷ்டிக்கு முன்னுள்ள சென்றகாலமும், மகாபிரளயத்துக்குப்பின்னுள்ள பௌஷிய காலமும், மத்தியமாகியவர்த்தமானகாலமாகிய மூன்று காலத்திலுமுள்ளது சத்தாம்.

இந்த லக்ஷணம் அற்பமேனும் அமையப் பெருமல், கருவாயுதித்தற்கு முன்னரும். மரணமடைந் தக்கினியில் தகிக்கப் பட்டபின்னரும், சுழுத்தி மூர்ச்சை சமாதி காலங்களிலு மில்லாததும் தவிர, சாக்கிர காலங்களிலும். கடத்தை மண்மயமாகப்பார்க்கில், கடத்திற்கு சொரூப மில்லாதது போலவும். படத்தை நூல்மயமாகப்பார்க்கில், படத்துக்கு சொரூப மில்லாதது போல—தூலசரீரத்தை பஞ்ச பூதமயமாகப்பார்க்கில், சொரூபமின்றி அபாவப் பொருளே என்பது நிச்சயம்.

தன்னைச்சூழ்ந்த பதார்த்தங்களையும், சீதோஷ்ணாதிகளையும் சரீரத்துக்கு வேறாகிய ஆத்மா அறிகின்றதேயன்றி சரீரமறிவதின்றாம் அறியுமெனின். சுழுத்தி மூர்ச்சை சமாதி மரணகாலங்களிலும், தூலசரீரம் தன்னைப்பற்றிய பதார்த்தங்களையும் அறியவேண்டும். அறியாமையால் சடமாயும். மாவானது வெல்லத்துடன் கூடியபோது மதுரமாயும், கூடாதபோது மதுரமின்றியதாயிருப்பதுபோல ஆன்மா தூலசரீரத்தோடு கூடியபோது ஆனந்தரூபமாயும், கூடாதபோது துக்கரூபமாயிருக்கவேண்டும். அங்ஙனமின்றி சாக்கிறத்தில் கூடியிருக்கும்போது துக்கானுபவியாயும், சுழுத்தி சமாதியில் கூடாதிருக்கும்போது சுகானுபவியாயுமிருக்கிறது.

வெல்லமானது மாவுடன் கூடியபோதும கூடாதபோதும் மதுரமாயிருப்பதுபோல. தூலசரீரம் ஆத்மாவுடன் கூடியபோதும். கூடாதபோதும் பிரியத்துக்கு விஷயமா யிருக்கவேண்டும். அங்ஙனமின்றி ஆத்மாவுடன் கூடியிருக்கும்போது நரை, திரை, மூப்பு வியாதிகளினாலும் சரீரம் மரணமாகி பிரேதமாய், வீங்கி வெடித்து நாறுதலினாலும் பிரியத்துக்கு விஷயமாகாமல் வெருப்புக்கே விஷயமாதலால் துக்கமாயும்.

கரசரணாதி அவயவங்கள் பிரிந்திராமல் சேர்ந்திருப்பது அகண்டலக்ஷணமன்றாம். ஓர்காலத்திலுள்ளதாய் மற்றோர் காலத்தில்லாததாயிராமல் எல்லாகாலங்களிலும். ஓர்தேசத்தி லுள்ளதாய் மற்றோர் தேசத்தில்லாததா யிராமல் எல்லா தேசங்களிலும். ஓர்வஸ்துவி லுள்ளதாய் மற்றோர் வஸ்துவி லில்லாததாயிராமல் எல்லா வஸ்துக்களிலும் வியாபித்திருப்பதே

அகண்ட லக்ஷணமாகும். இந்த லக்ஷணம் அற்பமேனு மமையப் பெருமல் ஜீவிக்குங் காலத்திருந்து சனித்தற்கு முன்னரும் மறித்த பின்னரும் இராமையால் காலத்திலும். காசியிலிருக்கும் போது ராமேஸ்வரத்தி வில்லாமையாலும், கர்ப்பத்திலிருக்கும்போது வெளியிலும், வெளியிலிருக்கும்போது, கர்ப்பத்திலுமில்லாமையால். தேசத்திலும், தூலவஸ்துக்களில் ஒன்று யிருந்து சூட்சும சரீரதத்வங்களில் ஒன்றுபிருமையால், வஸ்துவினல் பின்னப்பட்டு நான்கு முழமட்டமாயிருத்தலால் கண்டமாயும்—மனுஷ்யனென்பது மாறுபடாதிருத்தல் நிருவிகார லக்ஷணமன்றும். சனித்தல் மரித்தலாதி விகாரங்களின்றி இருப்பதே நிர்விகார லக்ஷணமாம். இந்த லக்ஷணம அற்பமேனுமின்றி கர்ப்பத்தினிடமாக குழம்பாயிருந்து பிண்டமாகத் திரளுதல், அவயவாகாரமாகுதல், சனித்தல், வளருதல், பருத்தல், இளைத்தல், மரித்தல் ஆகிய சட்பாவ விகாரமாயும்.

அத்யாசத்தால் நான் தேகமென்பது அபேதலக்ஷணமன்றும். ஓர்காலத்திலும் இதம் விருத்திக்கு விஷயமாகாமல், எப்போதும் அகம் விருத்திக்கு விஷயமாயிருப்பது ஆத்மலக்ஷணமாகும். இந்த லக்ஷணம் அர்ப்பமேனு மமையப்பெருமல், என்சரீரம் பருத்தது என இதம் விருத்திக்கு விஷயமாகின்றமையால் சரீரத்துக்கு ஆத்மா வேறும்.

பஞ்சபூதகாரியமானதால் உற்பத்தியுடையதாயும், நியமமின்றி நீர்க்குமிழிபோல் அழிவதாயிருத்தலால் அநித்தியமாயும். உள்ளிற்சார்ந்த அன்னுதிகளையும், வெளியிற் சார்ந்த புஷ்ப சந்தனுதி பரிமள வஸ்துக்களை, துர்க்கந்த வஸ்துக்க

ளாகச் செய்தலுமன்றி, நவத்துவாரங்களிலும் மல மூத்திர சோழையாதிகளை யொழுகிக்கொண்டிருத்தலால் அசுத்தமாயும். இதுதேகமென கடம்போ லறியப்படுவதால் திருசியமாயும் உள்ள அனாத்ம லக்ஷணங்களைப்பொருந்திய, அன்னமய கோசமாகிய, தூலசரீரத்தை ஆத்மாவெனல் தாணுவைப் புருடனென்றாற்போல மயக்கமாம்.

அன்னமயகோசம் ஆத்மா வல்ல வென்பதற்கு பிரமாணம்.

சசிவன்ன போதம்

எனதாடை பொன்பூமகன் றையல் பாய்மா
விபங்கண் முகங்கால்கை மெய்யென்ன வென்றும்
தனதா யுரைப்பான் வகுத்திந்த வூனை
தானென் றபர்த்தும் சொலத்தக்க தன்றே.

அர்த்தம்.

என்னுடைய வஸ்திரம், என்னுடைய பொன், எனது பூமி, எனது புத்திரன், எனது மனைவி, என்து குதிரை, என்னுடைய யானை இவ்விதம் இதம் விருத்திக்கு விஷயமாகின்ற வஸ்திரமுதல் யானை ஈராகச் சொல்லப்பட்ட பொருளனைத்தும், வேறாயும், அதற்கு தான் வேறாகவுமிருத்தல் போலஇந்ததேகத்திலும், என்னுடையகண், என்னுடையமுகம், என்னுடையகால், என்னுடையகை, எனதுஉடல். என்று தான்வேறு அவைகள் வேறாய்காணப்படுவதால், மறந்தும் இச்சரீரத்தை நான் என்று சொல்லத்தக்கதன்றாம்.

வாசிஷ்டம்.

மொய்யுட னுனே என்னில் மூவேழுநரக மருதே
வெய்யவன் றுயருமேனு மெய்யை யானென்ன வேண்டாம்,
அய்யமில் கேள்விநல்லோர் நினைவரோ வனைத்தா மூனும்,
கையுறத் தின்பரேனும் நாய்ப்பிணங் கவரார் நீசர்.

அர்த்தம்

காமக்ரோதாதிகளுக் கிருப்பிடமாயும், சர்மாதி ஆறு தத்வங்களோடு கூடியதுமான இந்த உடலை நான் என்று எவன் போசிப்பனோ அவனுக்கு இருபததோர் நரகப்ராப்தி உண்டாம். ஆனதால் கொடிய ஒரு துன்பம வந்தபோதலும் சரீரத்தை யானென்று சொல்லற்க. சம்சயமின்றி தத்வ விசாரம் செய்த விவேகிகள் (மலபாண்டத்தை) யாமென்று நினைப்பார்களா? நினையார் (உதாரணம்) சர்வமாம்சங்களையும் விடாமல் சாப்பிடக்கூடிய மிலேச்சர் நாய் மாம்சம் சாப்பிடாதது போல.

அருந்தின அன்னத்தின் முதல் பாகம் மலம். 2-வது பாகம் மாம்சமாம் 3-வது சூக்ஷ்மபாகத்தால் மனம் உண்டாகின்றது. பாலர்களது மனம் அன்னமில்லாமையால் இல்லாதது போலிருக்கின்றது அது அன்னத்தைப்புசித்தால் விருத்தியடைகின்றது. அவ்வன்னத்தைப் பதினாறு நாள்வரையிலும் சாப்பிடா விட்டால் மனம் நசிக்கின்றது. ஆதலால் மனம் அந்நத்தின் காரியமாம்.

குடிக்கப்பட்ட ஜலத்தின் முதல் பாகம் மூத்திரம், இரண்டாம் பாகம் இரத்தம். மூன்றாவது சூக்ஷ்மபாகம் பிராணன்.

பதினாறு நாள்வரையில் நீர் அருந்தா விட்டால், பிராணனுக்கு வியாகூல முண்டாகித் தேகத்தினின்றும் வெளிப்படும். ஆகை யால் பிராணன் அப்பு பூதத்தின் காரியமாம். இது சாந்தோக்ய உப நிடதம்—சாப்பிடப்பட்ட நெய்முதலியவற்றின் முதல் பாகம் எலும்பும், இரண்டாம் பாகம் கொழுப்பும், மூன்றாம் பாகம் வாக்கும் உண்டாகின்றன. சரீரத்தில் மிகுந்த குளிர்ச்சி யால் சூடுமறையுங்காலத்து வாக்குத்தடைப்படுகின்றன. ஆகை யால் வாக்கு தேயுவின் காரியமாம். மற்ற இந்திரியங்களின் காரணத்தை இவ்வண்ணமே அறிந்துகொள்க.

ஆகையால் அன்னமயகோசம், பிராணமய கோசம், மனோமய கோசமுதலிய பஞ்சகோசங்களையும், ஆத்மா வல்ல வென்பது சுருதியுக்தி அனுபவமாம்.

கைவல்லிய நவநீதம்.

கரணமா மனதுபுத்தி கருத்தாவா மவையான்மாவோ,
தரமுள விரண்டுகோசம் சத்துவகுண விகாரம்,
வரமறு துயிலா நந்த மயனையு நானென்றே,
விரவிய தமவருணுரூ விருத்தியின் விகாரமாமே.

பொருள்

கரணமாகிய மனமும் கருத்தாவாகிய புத்தியும், ஆகிய அவையும் நீயல்லே. சங்கற்ப ரூபம், நிச்சய ரூபம் என்னும் தாரதம்மியமுள்ள அவ்விரண்டு கோசங்களும், அபஞ்சீ கிருத பூதத்தின் சத்துவ குணகாரியம், ஆகலின் சிரேஷ்டமற்ற சுழுத்தியிலுள்ள ஆனந்த மயனையும், ஆன்மாவென்று கருதற்க தமோகுண ரூபமாகப் பொருந்திய அஞ்ஞான விருத்தியின் காரியமாம்.

சச்சிதானந்தமாய், சமமாய், நிரமாய், சாட்சியாய், ஏகமாய், நித்தியமாய், வியாபகமாய் பஞ்சகோசங்களின் ஆதாரமான பிரத்யகான்மாவே நீ, ஆகலின் அத்தன்மையதான பிரத்திய கான்மாவாகவே உன்னை அறிந்து, அநித்தியம் சடம், துக்கம் ஆகிய இவைகளையே ஆன்மாவாய் பொருந்துகின்ற முன்சொன்ன ஆன்மசுபாவத்திற்கு விபரீதசுபாவங்களையுடைய அனான்ம வர்க்கங்களாகிய, வஞ்சகத்தையுடைய பஞ்சகோசங்களாகிய குகைகளில், ஆன்மத்துவப்பிராந்தியை ஒழித்து வேறாவாய்.

சுருதி.

ஜாக்கிர ஸ்வப்பன சுஷுப்தியாதி பிரபஞ்சம் யத் பிரகாஸ்யதே—தத் பிரம்மாக மிதிஜ் ஞாத்வா சர்வபந்தை பிரமுச்யதே.

இதன் பொருள்

ஜாக்கிர, சொப்பன, சுழுப்தியோடு கூடிய பஞ்சகோசங்களும் எந்த வஸ்துவால் பிரகாசிக்கிறதோ அது பிரம்மம். இத்தன்மைய அறிவுருப பிரம்மத்தை, தனது சொருபமாய் எவனறிகிருனே அவன் சர்வபந்தங்களினின்றும் விடுபடுகிருன் அதாவது ஜீவன் முக்தனுகிருன்.

பஞ்சகோசவிவேகம் சமாப்தி.

சருவஞ்ஞ வுபாதி

எல்லாமறிதலாகிய சட்குணங்கள் தோன்றுதற்கு எது

சட்குணங்களேவை ?

சருவஞ்ஞத்துவம், சருவேசுரத்துவம், சருவாந்திரியாமித்துவம், சருவகாரணத்துவம், சருவநியந்திருத்துவம், சருவசத்தித்துவமாகிய இவையாம்.

சர்வஞ்ஞத்வம் யாது ?

ஜீவர்கள் மன வாணி மெய்களாற்செய்யப்படும், நல்வினை, தீவினையாதிகளனைத்தையும் ஏக காலத்திலறிதல்.

சருவேசுரத்துவம் யாது ?

சகலப்பிரபஞ்சததையும் சிருஷ்டித்து தன்னை வேறொருவர்களாலும் சிருஷ்டிக்கக்கூடாமையினாலும், தான் சிருஷ்டித்த வஸ்துக்களை வேறொருவர்களினாலும் மாறுபடுத்தக்கூடாமையினலாம்.

சருவாந்திரியாமித்துவம் யாது ?

ஜீவர்களுடைய அந்தக்கரணங்களி னுள்ளிருந்து, அவரவர்கள் கன்ம தாரதம்மியத்துக்குத் தக்கதாகச் சுகதுக்காதி போகங்களையனுபவிக்கும்படி, சூத்திரதாரி பாவையை யசைப்பதுபோல அசைப்பிக்கும் பிரேரகத்துவமாம்.

சருவ காரணத்துவம் யாது ?

சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகமென்னும் ஐந்திற்குங் காரணத்தன்மை அல்லது உபாதானம் நிமித்தமென்னும் இரண்டிற்கும் காரணத்தன்மையென அறிக.

உபாதான காரணம் யாது ?

காரிய சொரூபத்திற் பிரவேசித்து அதனேடொற்று

மையுடையதாக இருக்கிறதோ, எதையின்றி காரியந் திதி பெறுதோ, எதுகாரியத்தின் உற்பத்தி, திதி, லயமாகிய மூன்றற்குங் காரணமோ அதுவாம்.

திருஷ்டாந்தம்

மண், காரியமாகிய கடத்திற் பிரவேசித்து, அதனோடொற்றுமை யுடையதாயிருத்தலும், மண்ணையின்றி காரியமான கடந் திதி பெறுதிருத்தலும், மண்ணே கடத்தின் உற்பத்தி, திதி, லயமாகிய மூன்றிற்குங்காரணமாயிருத்தல் போலாம்.

நிமித்த காரணம் யாது?

எது, காரிய சொரூபத்திற் பிரவேசியாமல், வேறாயிருந்து காரியங்களை யுற்பத்தி செய்கிறதோ, எது, காரிய உற்பத்திக்கு மாத்திரம் காரணமோ அதுவாம்.

திருஷ்டாந்தம்.

படத்தை நெய்யும்படியானவன், படசொரூபத்திற் பிரவேசியாமல் வேறாயிருந்து படத்தையுற்பத்தி செய்தலும், நெய்யும்படியானவன் படத்தின் உற்பத்திக்கு மாத்திரங் காரணமாயிருத்தல் போலாம்.

சருவ நியந்திருத்துவம் யாது?

சமுத்திரம் அணைகடவாதிருக்கவும், சந்திர, சூரியன் நக்ஷத்திரம், வாடை, தென்றல் முதலியன கிரமந் தவறாதுசெல்லவும் நியமிக்குந் தன்மையாம்.

சருவ சத்தித்துவம் யாது?

இச்சா ஞானக் கிரியைகள் முதலிய சருவ சக்திகளை யுடைய தன்மைகளாம்.

விராட்வடிவம்

சமஷ்டி ஸ்தூலசரீர பிரபஞ்ச சகித சேதனனுக்கு விராட்டென்று பெயர். இப்போது சர்வ கர்மங்களின் போகஸ்தானமாகிய விராட்பகவானுடைய சரீரத்தைப்பூலோக ரூபமாய் வர்ணிப்பவராய் முதலில் அதன ளவைக் காண்பிக்கின்ருர். இந்தச்சம்புததீவு முழுதும் ஒரு லக்ஷ யோசனை அளவுள்ளதாம் இந்தத்தீவை நான்கு பக்கத்திலும் சுற்றியிருக்கும் உப்புக்கடலும் ஒரு லக்ஷயோசனை யளவுடையதாம், (1)

அதற்கப்பால் பிலக்ஷதீவாம். அது இரண்டு லக்ஷயோசனையளவுடையதாம். அதனை நான்குபக்கமும் சூழ்ந்திரா நின்ற கருப்பஞ்சாற்றுக் கடலும் இரண்டுலக்ஷம் யோசனையாம்(2)

அதற்சப்பால் சான்மலித் தீவாம். அது நான்கு லக்ஷம் யோசனை யளவுடையதாம். அதனை நாற்புரத்தும் சூழ்ந்திரா நின்ற மதுகடலும் நான்குலக்ஷம் யோசனையாம். (3)

அதற்கப்பால் குசத்தீவாம். அது எட்டுலக்ஷம் யோசனை யளவுடையதாம். அதனை நாற்புறமும் சூழ்ந்திருக்கும் நெய்க்கடலும் எட்டுலக்ஷம் யோசனையளவுடையதாம். (4)

அதற்கப்பால் கிரவுஞ்சத்தீவாம். அது பதினறு லக்ஷம் யோசனை அளவுடையதாம. அதனை நாற்புறமும் சூழ்ந்திருக்கும் பால் கடலும் பதினறுலக்ஷம் யோசனையளவுடையதாம். (5)

அதற்கப்பால் சாகத்தீவாம். அது முப்பத்திரண்டு லக்ஷம் யோசனையளவுடையதாம். அதனை நால்புறமும் சூழ்ந்திருக்கும் தயிர்க்கடலும் முப்பத்திரண்டு லக்ஷம் யோசனையளவுடையதாம். (6)

அதற்கப்பால் புஷ்கரத்தீவாம் அதுவும் அறுபத்து நான்கு லக்ஷம் யோசனையளவுடையதாம். அதன் நால்புறமும் சூழ்ந்திருக்கும் நன்னீர்க்கடலும் அறுபத்துநான்கு லக்ஷம் யோசனையளவுடையதாம். (7)

இவ்வேழு தீவுகளும ஏழுகடல்களும் ஒருங்குகூடி இரண்டு கோடியே ஐம்பத்துநான்கு லக்ஷம் யோசனையளவுடையதாம், மேல்கூறிய பதிநான்குங்கூடி எவ்வளவு யோசனை இருக்கின்றதோ அவ்வளவு யோசனையளவே நன்னீர்க்கடற்கும் அப்பாலிருககும் பூமியின் அளவதாம்.

அப்பூமிக்கப்பால் எட்டுக்கோடியே முப்பத்தொன்பது இலக்ஷம் யோசனையளவுடையது சொர்ன பூமியாம். அதுவே தெய்வலோகமாம். அப்பூமிக்கப்பால் வட்டவடிவமாய் லோகாலோகமென்னும் பர்வதமிருக்கிறது. அப்பர்வதத்தின் மத்திய தேசத்தைச் சாஸ்திரத்தின்கண் மான் சோத்தர ஸ்தான மெனக்கூறப்பட்டுள்ளது.

அம்மத்திய தேசத்தில் இரவும் பகலும் எப்போதும் சூரியபகவான் சுற்றிக்கொண்டேயிருக்கின்றனர். சிலர் பூமி, சுற்றுவதாகச் சொல்லுவார்கள், அது நலமுடையதன்று, ஏனெனின், உலகத்தில் சரம், அசரமென இரண்டு அதாவது சஞ்சரித்துக்கொண்டிருக்கும் ஜீவர்களை சரமெனப்படும்.

சலிக்காமல் இருந்த இடத்திலே இருக்கும் மரம், செடி பர்வதமுதலியவைகளை அசர ஜீவனெனப்படும். ஆகலின் பூமி அசரமானதால் அது சுற்றுகிறதென்று சொல்லுவது சுருதி, யுக்தி, அனுபவத்திற்கு முரணும். அவ்வசனம் உன்மத்தனது வசனம் போலாம. அம்மானமே சோத்தா பரிமண்டலத்தின் அளவு இலக்ஷத்தி ஒன்பதரைக்கோடி யோசனையாம். இவ்வளவு தூரம் சூரியபகவான் செல்கையாம். அவ்வளவு தேசத்தை மதிமான்கள் பூலோகமென்பர்.

இப்பூலோகம் யாவும் சேர்ந்து விராட் பகவானுடைய சரீரமாம். இவ்வித விராடவடிவம் நாம் என்று உபாசிக்கத்தக்க தாம அசனுல் சமதரிசனமான சத்வ குணமுண்டாம். பின் சமஷ்டி உபாதியை விட்டு நிருபாதிக பிரம்மமாய் நிலை பெற்றிருத்தலே பிரம்மஞ்ஞானமாம்.

திரிபுடி பதிநான்கு

சுரோத்திரேந்திரியம் அத்யாத்மம், அதன் விஷயமாகிய சப்தம் அதிபூதம், திசையின் அபிமான தேவதை, அதிதெய்வம்.

இவ்விடத்தில் கிரியாசக்தி யுடையனவும் ஞானசக்தி யுடையனவுமாகிய இந்திரியங்களும் அந்தக்கரணமும் அத்யாத்மமெனப்படும். அவற்றின் விஷயம அதி பூதமெனப்படும். அவற்றின் சகாயமான தேவதை அதிதெய்வம். (1)

துவக்கிந்திரியம் அத்யாத்மம், அதன் விஷயமான ஸ்பரிசம் அதிபூதம், வாயுவு அபிமான தேவதை அதிதெய்வம். (2)

நேத்திரேந்திரியம, அத்யாத்மம், ரூபம், அதிபூதம், சூரியன் அதிதெய்வம். (3)

இரசனேந்திரியம் அத்யாத்மம், இரசம் அதிபூதம், வருணன் அதிதெய்வம். (4)

கிராணேந்திரியம் அத்யாத்மம், கந்தம் அதிபூதம், அசுவினிகுமாரன் அதிதெய்வம். (5)

வாக்கிந்திரியம் அத்யாத்மம், சொல்லப் படுவது அதிபூதம், அக்கினி தேவதை அதிதெய்வம். (6)

பாணிந்திரியம் அத்யாத்மம், பதார்த்தங்களைக்கிரகித்தல் அதிபூதம், இந்திரன் அதிதெய்வம். (7)

பாத இந்திரியம அத்யாத்மம், நடத்தல் அதிபூதம், விஷ்ணு அதிதெய்வம். (8)

பாயுரு இந்திரியம் அத்யாத்மம், மலவிஸர்சனம் அதிபூதம், யமன் அதிதெய்வம். (9)

உபஸ்த இந்திரியம் அத்யாத்மம், மைதுனக்கிரியாரூப தர்மத்தினது உற்பத்தி அதிபூதம். பிரஜாபதி அதிதெய்வம் (10)

மனசு அத்யாத்மம், மனனத்தின் விஷயம் அதிபூதம், சந்திரன் அதிதெய்வம். (11)

புத்தி அத்யாத்மம், அதற்கு விஷயம் அதிபூதம். பிரகஸ்பதி அதிதெய்வம். (12)

அகங்காரம் அத்யாத்மம், அகங்காரத்தின் விஷயம் அதிபூதம், ருத்திரன் அதிதெய்வம். (13)

சித்தம் அத்யாத்மம், சிந்தனையின் விஷயம் அதிபூதம், விஷ்ணு அதிதெய்வம். (14)

இந்த இடத்தில் சாக்ஷியையும் அதி தெய்வமாய் சொல்லப்படும். ஆகிய இவை பதிநான்கு திரிபுடியாம்.

திரிபுடியின் லக்ஷணம்.

ஞாதிரு, ஞானம், ஞேயம் ஆகிய மூன்றும். ஞாதிருவென்பது—சர்வ ஞானத்திற்கும் கர்த்தாவாகிய ஜீவனும்.

ஞானமென்பது குளத்திலுள்ள ஜலம் மடை வழியாய்ப் புறப்பட்டு நீண்ட வாய்க்கால் வடிவடைந்து வயலிற் செல்லுகின்றது வயலிற் பாய்ந்து வயலாகாரத்தை யடைகிறது. அதுபோல, அந்தக்கரணமும் இந்திரியமாகிய துவாரத்தின் வழியாய் வெளியே சென்று விஷய ரூபமான வயலை அடைகிறது. அங்குச்சரீரமுதல் கடாதி விஷயம் வரையிலுள்ள அந்தக்கரணத்தின் வாய்க்கால் போன்ற நீண்ட பரிணாம மெதுவோ அதனை ஞானமென்பர். அந்த ஞானத்தால் அறியப்படுவது எதுவோ அது ஞேயமாம். அது கடபடாதி விஷயம்.

பிரமா கர்த்தா, பிரமாதா—பிரமா விஷயம் பிரமேயம்.
பிரமாவென்பது ஞானம். பிரமாதாவென்பது ஜீவன்.
பிரமேய மென்பது, கடபடாதி விஷயம்.

ஜீவ விசேஷண லக்ஷணம்.

அந்தக்கரண விசிஷ்ட சேதனம் பிரமாதாவாம். அதுவே கர்த்தா, போக்தாவாய ஜீவனும்.

விசேஷணமும், விசேஷியமும் இரண்டும் சேர்ந்திருப்பது விசிஷ்ட மெனப்படும். அது நீலகடம், என்பதில் கடத்தின் நீலவர்ணம், விசேஷணமாம் கடம் விசேஷியமாம்.

தாஷ்டாந்தம்.

இங்கே அந்தக்கரணம் விசேஷணம், சேதனம் விசேஷியம். ஒரே அந்தக்கரணம், பிராந்தி காலத்தில், கர்த்தா போக்தா வென்று விவகரிக்கும்போது, சேதனத்துக்கு விசேஷணமாகவும், சேதனம் ஜீவனாகவும். ஞான காலத்தில் அகர்த்தா அபோக்தா வென்று விவகரிக்கும் போது அந்தக்கரணம் உபாதியாகவும். சேதனம் சாக்ஷியாகவுமிருக்கிறது.

ஒன்றன் சொரூபத்தில் பிரவேசித்து, வேறு பிரித்தறிவிக்கும் வஸ்து விசேஷண மெனப்படும். அது நீலவர்ணம, கடத்தின் சொரூபத்தில் பிரவேசித்து மஞ்சள், வெண்மை முதலிய வர்ணங்களுடன் கூடிய கடங்களினின்றும், இந்நீல கடத்தை வேறுபடுத்தி யறிவிக்கிறது. ஆகையால் நீலத்தன்மை கடத்தின் விசேஷணமாம் கடம் விசேஷியமாம்.

இதுபோல தாஷ்டாந்தம் —அந்தக்கரணம், கர்த்தா போக்தா வென்று சேதனத்தில் பிரவேசித்து, ஈசுர சேதனத்தினின்றும், இது ஜீவனென்று பின்னப்படுத்தி யறிவிக்கிறது.

அந்தக்கரண உபகித சேதனம் சாக்ஷியாம்.

உபாதியுடையது உபகிதம்.—எது வஸ்துவின் சொரூபத்தில் பிரவேசியாமல், வேறுபடுத்தி யறிவிக்கிறதோ அது உபாதி எனப்படும்.

கடம் கடாகாயத்தில் பிரவேசியாமல், மற்ற மடாகாயம் மகா காயத்தினின்றும், இது கடாகாயமென்று வேறுபடுத்தி யறிவிக்கிறது. ஆனதால் கடம் கடாகாயத்திற்கு உபாதியாம்.

கடாகாயம் உபகிதமாம். இதுபோல ஞான காலத்தில் அந்தக்கரணம் அகர்த்தா, அபோக்தா வென்று விவரிக்கும்பொழுது சேதனத்தில் பிரவேசிக்காமல், ஈசுர சேதனத்தினின்றும், இது கூடஸ்தனென்று வேறுபடுத்தி யறிவிக்கிறது. ஆனதால் அந்தக்கரணம் உபாதியாகவும் சேதனம் உபகிதமாகவுமிருக்கிறது.

ஒரே சேதனம் அந்தக்கரணம் விசேஷணமாகும் பொழுது ஜீவனாகவும், அந்தக்கரணம உபாதியாகும்போது சாக்ஷியாகவுமிருக்கிறது.

விசேஷண முடையது விசிஷ்டமெனப்படும்.

உபாதியுடையது உபஹித மெனப்படும்.

அந்தக்கரண விசிஷ்டசேதனம் பிரமாதாவாம்.

அந்தக்கரண உபகித சேதனம் சாக்ஷியாம். இது அவச்சேதவாதம். அவச்சேத வாதத்தில் அந்தக்கரணத்தில் பிரதி பிம்ப ஆபாசனை அங்கீகரிக்கப் படுவதில்லை. அந்தக்கரணம், சேதனம் இரண்டுமே ஜீவனும்.

ஆபாச வாதத்தில், ஆபாச ஸஹித அந்தக்கரண விசிஷ்ட சேதனம் பிரமாதாவாம். இரண்டு பக்ஷங்களிலும், சேதனம் விசேஷியமாம். ஆபாசம அந்தக்கரணம் விசேஷணமாம்.

ஜன்மாதி சம்சாரம விசேஷணம் விசேஷியமான சேதனம் ஆகிய இரண்டினிடத்தும் பிராந்தியினால் தோற்றுகிறது.

வாஸ்தவமாய் அந்தக்கரணமாகிய விசேஷணத்தில் ஜன்மாதி சம்சாரம் உளவாம்.

(சங்கை) ஆபாச சஹித அந்தக்கரணம் கர்ப்பனுரூபமாம். அது ஜன்மாதி பந்தத்திற்கு எங்ஙனம் அதிஷ்டானமாகும். வந்தியாசுதனே இல்லை. அவன் ராஜாவாயும் அநேக பிரஜைகளுக்கு ஆதாரவாயுளனென்பது எங்ஙனம் கூடும்?

சமாதானம், ஜன்மாதி சம்சாரம் ஆபாச சஹித அந்தக்கரணத்தில் இன்றும். ஆனல் சன்மாதி சம்சாரமும் ஆபாச ஸகித அந்தக்கரணமும், ஆகியவனைத்தும் சேதனத்தில் கானல் ஜலம்போல விவர்த்தமாம்.

அத்யாச மேன்பது யாது?

தனது அபாவத்தின் அதிகரணத்திலுள்ள அவபாஸம் எதுவோ அது அத்தியாசமெனப்படும்.

அதாவது தனது என்றது (சர்ப்பம்) அபாவத்தின் (இல்லாத) அதிகரணம் (இடம்) அது ரஜ்ஜுவிடம் அவபாசம் (தோற்றம்) ஒருங்கே இவ்வித அர்த்தமுண்டாம். தானில்லாதவிடத்தில் தான் தோற்றுதல் அத்தியாசமாம். இதையே விவர்த்தமென்பர். இதுபோல தாஷ்டாந்தத்திலும் பார்க்க.

மூன்றுவித ஆத்ம லக்ஷணம்.

ஜீவாத்மா, அந்தராத்மா, பரமாத்மாவென ஆத்மா மூன்றும். அவற்றுள் தப்தாய பிண்டம்போலத் தேகாதிகளே யானெனதென்று சகல சமுசாரவிவகாரமுள்ளவனே ஜீவாத்மா.

அந்தராத்மா வேன்பது யாது?

கமலபத்திரோதகம்போலத் கிரேகாதி சகல சமுசாரவிவகாரத்தில் பொருந்தியும் பொருந்தாதவனே அந்தராத்மா

பரமாத்மா வென்பது யாது ?

சூரியனைப்போல் அவஸ்தாத்திரய சாக்ஷியே பரமாத்மாவாம்.

ஜலத்தின் அசைவைச் சூரியனது அசைவென்றல்போலும் மேகம் ஓட சந்திர னோடுகின்றதெனல் போல, பரமாதமாவாய நம்மிடத்தில் பிராந்தியினுல் ஆணென்றும், பெண்ணென்றும் அலி என்றும் சமுசாரியென்றும், சந்யாசியென்றும் தோற்றுகின்றன. வாஸ்தவமாய் இவைகளின்ரும்.

ஈசுர சொரூபம்

சுத்த சத்வகுண சகிதமாயை, மாயையின் அதிஷ்டான சேதனம் இவ்விரண்டும் ஈஸ்வரனும. இது அவச்சேதவாதம்.

ஆபாச வாதத்தில் சத்வகுணத்தோடு கூடியமாயை, மாயையின் அதிஷ்டான சேதனம், மாயையில் பிரதிபிம்ப ஆபாசம் இம்மூன்றும் சேர்ந்து ஈசுவரனெனப்படும் அவரே ஜகத்திக்குக்காரணம். ஆபாச வாதம் மூன்று சத்தை வாதம். அவச்சேதவாதம் இரண்டு சத்தைவாதம்.

மூன்று சத்தை லக்ஷணம்.

வியாவகாரிக சத்தை, பிராதிபாஸிக சத்தை, பாரமார்த்திகசத்தை எனமூன்ரும்—ஈசுர சங்கல்பத்தாலுண்டான கேவல அவித்தையின் காரியமான பஞ்ச பூதங்களும் அவற்றின் காரியமான சரீரமுதலியவை வியாவகாரிக சத்தையாம்.

பிராந்தியினுல் உண்டாகின்ற சொப்பனம், கிளிஞ்சல் வெள்ளி முதலியவற்றை பிராதிபாஸிக சத்தை என்பர். சேதனம் பாரமார்த்திக சத்தையாம்.

சேதனத்துக்கு வேருன சகல அநாத்ம வஸ்துக்களுக்கு பிராதிபாஸிக சத்தையேயுளதென்பது இரண்டு சத்தைவாதம் வியாவகாரிக சத்தை அங்கீகரிப்பதில்லை. ஏனெனில் ஆத்மா ஒன்று, அநாத்மா ஒன்று ஆக வஸ்து இரண்டானதால் சத்தையும் இரண்டே. இது இலாகவமாம்.

இதையே திருஷ்டி சிருஷ்டி வாதமென்பர். அதாவது சர்வமும் மனோகல்பிதமென்று சொல்லுவது திருஷ்டி சிருஷ்டியாம். இந்த திருஷ்டி சிருஷ்டிவாதம் பிருஹதாரணிய உபநிஷத்தின் சங்கர பாஷ்யத்திலும், வாசிஷ்டத்திலும், விருத்திப்பிரபாகரத்தின் எட்டாவது பிரகாசத்திலும, ஆத்மபுராணத்திலும் விசாரசாகரம் அருவது தரங்கத்திலும், விஸ்தாரமாய் சொல்லப் பட்டிருக்கிறது. விருப்பமுள்ளார் ஆண்டு காண்க அவ்விஷயம் கடினமானதால் ஈண்டு நிரூபிக்கப்படவில்லை. இருபக்ஷத்திலும் அவச்சேதவாதம் உத்தம அதிகாரிக்காம்.

ஆசாரியஸ்வாமிகள் அவச்சேதவாதமே உத்தமமென்று சொல்லியிருக்கிறார். ஆபாச வாதத்தில் கௌரவ தோஷமுண்டு. அவச்சேதவாதத்தில் இலாகவமுண்டு. ஒரு ரூபாய் விலையுள்ள வஸ்துவை பத்து ரூபாய் கொடுத்து வாங்குதல் கௌரவதோஷமாம். அவ்விதம் வாங்காவாகாதென்பது கருத்து.

இந்த ஜீவனுல் பூர்வ சரீரத்தில் செய்யப்பட்ட புண்ணிய பாவ கர்மத்தின் பலன் உத்தர சரீரத்தில், அந்த ஜீவனுக்குச் சுகதுக்க மாகிவிடுகிறது.

பாவ கர்மம்.

திரிகரணத்தால் செய்யப்பட்ட பாவ கர்மமிதுவாம்.

திருட்டு, பரஸ்திரீ கமனம், ஜீவஹிம்சை ஆகிய மூன்றும் சரீரத்தால் செய்யப்பட்ட பாவமாம்.

பொய் மொழிதல், பிறர் நிந்தை, கடுஞ்சொல், விருதா வாக்கியம் என்னும் நான்கும் வாக்கால் செய்யப்பட்டபாவமாம்.

பிறர் பொருளை இச்சித்தல், ராகத்துவேஷாதியின் சிந்தனம் அவிவிவேகம் ஆகிய 3 ம் மனதால் செய்யப்பட்டபாவம்.

ஒருவன் பாவகர்மத்தையும் அதன் பலத்தையும் அறியாமல் பாவம் செய்வானுயின் அவனுக்கு அற்ப துக்கப்பிராப்த்தியுண்டாம். ஒருவன் பாவகர்மத்தையும் அதன் நரகாதி பலத்தையும் சுருதிப் பிரமாணத்தா லறிந்தும் மீண்டு அப்பாவகர்மத்தைச் செய்வானுயின் அவனுக்கு அப்பாவ கர்மத்தால் அதிகதுக்கத்தினடை வுண்டாம்.

யாவன் பொய் வசனமாகிய பாவ கர்மத்தை யறிந்தும் பொய் புகல்வனுயின் அதிகதுக்கத்தைத் தருவதான கோர நரகத்தை யடைவன்—யாவன் சந்நியாச வாசிரமம் தரித்துக் கொண்டு தேகாபி மானத்தோடு கூடியவனுய்ப் பொய் பேசுவனே அப்புருடன் பரம சண்டாளனும். உயிரோடு வாழினும் இறந்தவனே யாவன். ஏனெனின் இவ்வுலகின்கண் சர்வப்பிராணிகளும் பொய் புகன்றவனை யிகழ்வர். ஆகையால் இகபரத்திலும் பொய் பேசுபவனுக்குத் துக்கமே யுண்டாம். பொய் மொழியற்க என்பதாகிய நிஷேத வாக்கியம்.

எப்புருடன் கோபமுடையவனுவனே அவன் நாஸ்திகனும் ஏனெனின் தேகாபிமானமே கோபகாரணமாம். தேகா

பிமான மின்றி கோபமுண்டாகாதாம். ஆனதால் கோபமுடைய புருஷனுக்கும் நாஸ்திகனுக்கும் சிறிது மாத்திரமும் பேதமின்றாம். பொய் வசனத்திற்கும் கோபத்திற்கும் தேகாபிமானமே காரணமாம். அதுவே விபரீத பாவனையாம் அந்த விபரீத பாவனை நிவர்த்திக்காக சிவோகமென்று நிரந்தரம் நிதித்யாசனம் செய்யத்தக்கதாம்—சந்தேகமுடையவன் மனனம் செய்க.

எதார்த்த வஸ்துவை அறியாதார் சிரவணம் செய்யத்தக்கது. சிரவணத்தால் ஆவரணம் நஷ்டமான பின்னர் சந்தேக விபரீத மின்றேல் செய்யக்கூடிய காரிய மொன்று மின்றாம்.

பரோபகாரார்த்தமாய் செய்வானெனின், அது பொருந்தாது. ஏனெனின் உலகத்தில் பாமரர்முதல் பண்டிதரீராக பிரதிப்பிரயோஜன மின்றி ஒருகாரியம் செய்வதின்றாம். அநுபவத்தில் சித்தித்த வஸ்துவில் தர்க்கிக்கும் தர்க்கம் கனிஷ்டத்தை சம்பாதிக்கும் தர்க்கமாம் அதாவது நஷ்டத்தை சம்பாதிக்கும் தர்க்கமாம். வட்டிக் காசைப்பட்டு முதலிழந்தான் நியாயமாம். ஞானி போதித்தலாதி விவகாரத்தில் பிரவிர்த்திப்பானெனின் ஞானமின்றாம். வியாப்பியமின்றாயின் வியாபகமின்றாம். அதாவது வியாப்பிய தூமமின்றாயின் வியாபக வன்னியின்றாம். ஆகவின் கனிஷ்ட தர்க்கமாம்.

பரோபகாரார்த்தம் செய்வானென்று கூறும் வாதியின் பாலிது கேட்கவேண்டும். தனது திருஷ்டியில் பரோபகாரமென்று தோற்றுகின்றதா? அல்லது அன்னியர் திருஷ்டியில் பரோபகாரமென்று தோற்றுகின்றதா? தனது திருஷ்டியில் தோற்றுகின்றதென்னும் முதற் பக்ஷம் பொருந்தாது. ஏனெ

ஷின் ஞானியின் திருஷ்டியில் சர்வமும் தானாகவே அறிந்து ளான். அவன் பரோபகாரார்த்தம் செய்வானென்பது, பதியின் பால் மோகமுண்டாகக்கூடிய எவ்வன ஸ்திரீக்கு தன்னிடத்தில் தனக்கு மோகமுண்டானது போலாம்.

அன்னியர் திருஷ்டியில் தோற்றுகின்றதால், ஞானிக்கு பிரவிருத்தி உண்டாகின்றன வெனின் அது ஒருவன் பசிக்கு மற்றொருவனன்ன மருந்தினது போலாம். ஆகையால் இவ்விரு பக்ஷமும் நலமுடையதன்றாம், ஞானிக்கு நிவர்த்தியே நலமாம்.

கர்மம் மூன்று விதம்.

பிராரத்த கருமமென்றும், சஞ்சிதமெனவும், ஆகாமிய மெனவும் மூன்று விதமாம்.

வர்த்தமான காலத்தில் அனுபவிக்கப்பட்ட சுகதுக்கங் கள் பிராரத்தமாம்—அனந்த ஜென்மத்தில் செய்யப்பட்டு பல னுக்கு வராமலிருக்கும் கர்மம் சஞ்சிதமாம அது தர்ம பண்டு வைத்தது போலாம். வர்த்தமான சரீரத்தில் செய்யப்படும் புண்ணிய பாவ கர்மம் ஆகாமியமாம். அது புனர் ஜன்மத் திற்கு ஏதுவாம். சஞ்சிதம் ஞானத்தால் நசித்துப்போம.

கைவல்லிய நவநீதம்.

பஞ்சினை யூழித்தீப்போற் பலசன்ம விவித வித்தாம்
சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீறாக்கும்
கிஞ்சிதா காமியந்தான் கிட்டாமல் விட்டுப்போகும்
விஞ்சின பிராரத்தத்தின் வினையநுப வித்துத் தீரும்.

இதன் பொருள்

பருத்திப்பஞ்சு முதலியவற்றை வடவாமுகாக்கினி

சார்ந்தால் எப்படி எரித்து நீறெழுப்பண்ணுமோ, அதுபோல அநேகவித ஜநநங்கட்கு நாநாவித பீஜங்களாகிய, சஞ்சித கர்மங்களனைத்தையும் ஞானக்கினியானது எரித்துப்பஸ்மமாகப் பண்ணும். ஆகாமிய கர்மமானது அற்பமும் சம்பந்தியாமல் விட்டுப்போம். சேஷமான பிராரத்த கர்மம் அனுபவித்து தீரும்.

ஞானம் இரண்டு விதம்.

பரோக்ஷ ஞானமென்றும் அபரோக்ஷ ஞானமென்றும். பிரஹ்மம் இருக்கிறது என்னும் ஞானத்தைப் பரோக்ஷ ஞானமென்பர். பிரஹ்மம் நான் என்னும் ஞானத்தினை அபரோக்ஷ ஞானமென்பர். நீ பிரஹ்மம் என்று குருவினாலுச்சரிக்கப்பட்ட வாக்கியம் சுரோதாவின் காதில் சம்பந்தப்பட்டவுடனே நான் பிரஹ்மம் என்னும் அபரோக்ஷ ஞானம் சுரோதாவுக்குண்டாகிறது. சில நூலாசிரியர் கேவல மகாவாக்கியத்தால் பரோக்ஷ ஞானமுண்டாகிறது, அபரோக்ஷ ஞானம் உண்டாகிறதில்லை சிரவண மனனாதிகளால் அபரோக்ஷ ஞானமுண்டாகிறதென்பர் அது நலமுடையதன்று, ஏனெனின் சப்தத்தின் சுபாவமிதுவாம். பத்தாமவ னிருக்கிறானென்னும் சப்தத்தால் பரோக்ஷ ஞானமுண்டாம். நீ தசமனென்னும் சப்தத்தால் அபரோக்ஷ ஞானமுண்டாம். ஆனதால் சப்தத்தால் பரோக்ஷ ஞானமே உண்டாமென்னும் நியமமின்றாம். பரோக்ஷம் அபரோக்ஷமிரண்டு ஞானமுமுண்டாம்.

அபவாத இலக்ஷணம்

இது சர்ப்பமன்று இரச்சுத்தான் என்று தெளிந்தாற்

போலும், இவ்வுரு புருடனன்று, கட்டை என்று தெளிந்தாற் போலும், தேசிகர் உபதேசித்த உபதேச வழி கொண்டும் அத் தேசிகர் உபதேசித்தபடியே உபதேசித்தருளும் சாஸ்திர விவே கத்தைக்கொண்டும், இது சரீரமன்று, இது புவனமன்று, இவை பூதங்களல்ல ஸ்திரமான சொரூப ஞானமென்னும் பிரஹ்மமே என, சமுசயமின்றித்துணிவதே அபவாதமாம்.

ஆதார இலக்ஷணம்.

ஆதாரம் சாமான்யமென்றும், விசேஷமென்றும் இரண்டு விதம். அதாவது பிராந்தி காலத்திலும் பிராந்தி நீங் கிய காலத்திலும் தோற்றுவது சாமான்ய ஆதாரமாம்—இது கயிர் என்னுமிடத்தில், இது என்னும் இதந்தை சாமான்யம். இது கயிர் என்று தோற்றுகிற, பிராந்தி இன்றிய காலத்தும் தோற்றுகிறது. இது சர்ப்பம் என்று தோற்றுகிற பிராந்தி காலத்தும் இருக்கிறது. ஆதலால், இது என்பது சாமான்ய ஆதாரம்.

எது பிராந்தி காலத்தில் தோற்றுகிறதில்லையோ எதன் தோற்றத்தால் பிராந்தி நிவிருத்தியாகிறதோ அது விசேஷ ஆதாரமாம். அதாவது இது சர்ப்பம் என்கிற பிராந்தி காலத் தில் கயிர் தோற்றமலும், கயிர் தோற்றத்தால் பிராந்தி நிவி ருத்தியாதலால் கயிர் விசேஷ ஆதாரமாம்.

தாஷ்டாந்தத்தில்—நான் என்னும் அகம் விருத்தி சாமான்ய ஆதாரமாம். நான் பிரம்மரூபன், சித்துருபன், ஆனந்தருபன் என்பது விசேஷ ஆதாரமாம்.

நான் கர்த்தா, போக்தா, சுகி, துக்கி என்கிற பிராந்தி காலத்தும் தோற்றுகிறது. நான் பிரமமரூபன், சித்ரூபன், ஏகன், வியாபகன் என்கிற பிராந்தி இன்றிய காலத்தும், தோற்றுகிறது. ஆதலால் நான் என்பது சாமான்ய ஆதாரமாம்

நான் பிரம்மரூபன், வியாபகன, சித்ரூபன் என்னும் தோற்றத்தால் நான் கர்த்தா, போக்தாவென்னும் பிராந்தி நிவிருத்தியாதலால், பிரம்மரூபன் வியாபகம், சித்ரூபம், ஆகிய இவை விசேஷ ஆதாரமாம.

குரு ஸ்துதி.

குருர் பிரம்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ மஹேஸ்வரஹ
குருரேவ பரம்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ

இதன் பொருள்.

குரவனே பிரமமா குருவே விஷ்ணு குருவே மகேஸ்வரனாகிய தேவனும். குரவனே ஏகமாய பரப்பிரம்மமாம். ஆதலால் அததன்மைய ஸ்ரீ குருவிற்கு நமஸ்காரம.

கு. என்பத அஞ்ஞானம், ரு. என்பது ஞானம்,

ரு. என்னும் ஞானத்தால், கு. என்னும் அஞ்ஞானத்தை நாசமாக்குபவரே (குரு சப்ததின் பொருளாம.)

மற்றுமோரு போருள்.

கு. என்பது தாரதனுதிகள், ரு. என்பது ஞானம்

ரு. என்னும் ஞானத்தால், கு. என்னும் தாரதனுதிகளை தியாகம் செய்து தனம் தனியே நிற்பவர் குருவாம். இவ்வித குரு வாயிலாக இந்நூலின் சிரவண மாத்திரத்தால் ஞானமுண்டாம். ஞானவாயிலாய் மோக்ஷமுண்டாம்.

சிரவணமாத்ரேன பிரம்மஞ்ஞானம் யதோ பவேது என்னும் ஆசாரியசுவாமிகள் வாக்கியம.

இவ்வித ஞானநூல் விசாரத்தைவிட்டு யோகத்தால் கர்ம உபாசனைகளால் ஞானமுண்டாமென்பது.

பிண்டம் த்யக்த்வா கரம் லேடி, நியாயமாம்.

அதாவது கரத்திலுள்ள தயிர்ச்சாத உருண்டையை எரிந்துவிட்டு பசி நிவிருத்திக்காக புறங்கையை நக்கினது போலாம்.

சிரவணாதிகளின் இலக்ஷணம்.

வேதாந்த வாக்கியத்தின் தாற்பரியமான எதார்த்த வஸ்துவை நிச்சயஞ் செய்வது சிரவணமாம்.

துவைத நீக்கமான யுக்திகளாலும், அத்விதீய பிரஹ்மத்தைச் சிந்தனை செய்தல் மனன மென்று சொல்லப்படும். அவ்வுக்தி இதுவாம், நாமரூபம் மித்தை. பிரதிஞ்ஞை—உற்பத்தியானதால். ஏது – கடம்போல—திருஷ்டாந்தம்.

பிரம்மாகார விருத்தி தயில தாரைபோல் ஸ்திதி பெற்றிருத்தல் நிதித்தியாஸனமாம். நிதித்தியாசனத்தின் முடிவு சமாதி. ஞாதுரு ஞானம் ஞேயம். ஆகிய திரிபுடி தோற்றத்தோடு கூடிய சமாதி சவிகற்ப சமாதி திரிபுடி தோற்றமின்றியது நிர்விகற்ப சமாதியாம்.

சமாதி இலக்ஷணம்.

நிதித்தியாசனத்தில் தியாதா, தியானம், தியேயம் என்னு மிம்மூன்று திரிபுடிகளும் தோற்றுகின்றன.

அவற்றுள், சித்தமானது எப்போது அப்யாச வசத்தால் தியாதா என்பது (தியானிப்பவன்) தியானம் என்னுமிரண்டையும் கிரமமாக விட்டுத்தியானிக்கப்படும் பொருளாகிய தியேயம் ஒன்றையே விஷயம் செய்வதாகின்றதோ அப்போது சமாதியென்று சொல்லப்படும். அதில் (திருஷ்டாந்தம்).

வாயுவில்லாத இடத்தில் இருக்கும் தீபம் நிச்சலமாயிருத்தல்போல், சலன ரகிதமான தனது சொரூபத்தில் சித்தம் நிற்றலே சமாதி என்பர். இங்கு இஃது விசேஷமாம். அக்கினியின் உபாதான காரணம் வாயுவாம் அதனால் அக்கினியின் உற்பத்தி ஸ்திதி லயம் வாயுவின் அதீனமாம் ஆகையால் வாயு முழுதுமில்லாவிட்டாலும் தீபம் நிலைக்காது. இதனால் அசைவு வடிவமாக வாயுவில்லாததும் சூக்ஷ்ம வடிவமாக வாயுவுள்ளதுமாகிய அறை முதலிய இடங்களில் தீபம் அசையாதிருக்கின்றது. அதுபோலச் சமாதியிலும் மனம் முழுதுமில்லாவிட்டால் சரீரம் நிலையாமல் கீழே சாய்ந்துவிடும். ஆகையால் சங்கல்பம் நிச்சயம். சிந்தனம் யானெனதென்னுமபிமானம் என்னும் விருத்திகளைவிட்டுச் சூக்ஷ்ம வடிவமாகச் சமாதியில் மனம் நிலைத்திருக்கிறது. இச்சமாதி சிரவண மனன நிதித்தியாசனக் கிரமமாக ஒருக்ஷண நேரமிருந்தாலும ஆவரண நஷ்டமாய் ஞானமுண்டாம். அது ரஜ்ஜு ஞானம், க்ஷணத்திலுண்டான போதிலும் அடுத்தக்ஷணம் சர்ப்பப் பிராந்தி நீங்கி பய முதலிய துக்கம் நிவிருத்தியாதல் போலாம்.

இச்சமாதிக்கு இயமம் நியம முதலியவையும் சாதனமென்பர்.

இயமமாவது யாது ?

கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிரஹ்மசரியம், பிறர் பொருள் கவராமை ஆகிய ஐந்தும் இயமமென்பர்.

(நியமமாவது) சௌசம், சந்தோஷம், தவம், சிரவணம், குருஸ்துதி ஆகிய ஐந்தும் நியமமென்பா.

பிரம்மசர்ய மென்றது யாது ?

ஸ்மரணம் கீர்த்தனம் கேலி பிரேக்ஷணம் குஹ்ய பாஷணம, சங்கல்போ அத்யவசாயச கிரியா நிவிருத்தி ரேவச.

(இதன் பொருள்) ஸ்திரீயை சிந்தித்தல், ஸ்துதித்தல், அவளிடம் பரியாசம் பேசுதல், ஸ்திரீயை பார்த்தல், தனியிடத்தில் இருவரும் ரகஸ்யவார்த்தை பேசுதல், ஸ்திரீயை சங்கல்பித்தல், தியாநிக்தல், இருவரும் சய்யோக சம்பந்தமாதல் ஆகிய இவ்வெட்டுவித சேஷ்டையின்றியது பிர்ம சர்யமாம்.

ஒருகால் எவனுவது மாதியினல் நிஷித்த கர்மத்தைச் செய்தால், அந்தபாவத்தை நிவிருத்தி செய்வதற்காப் பிராயச் சித்தத்தைச் செய்யவேண்டும். அப்பிராயச் சித்தமிதுவாம். சந்நியாசியானவன் ஒருகால் மறதியினல் பொருளைப்பரிசிப் பானேயானல் உடன் அப்பொருளை எறிந்துவிட்டு மூன்று நாள் உபவாச மிருத்தலால் அப்பாவ நிவர்த்தியாம். அவ்விதம் செய்யாமல் மேலும் பொருளவா மிகுதியுடையவனுயின் வர்ணுசிரமத்தி நின்று பிரஷ்டனுவன். பின் தேகாந்தத்தில் கோர நரகத்தையநுபவித்து மிலேச ஜனன முண்டாம்.

மகாவாக்கியம்.

சுபாவ சித்தார்த்த போதக வாக்கியங்களெவை? அவைகள் சுருதிக்கு விரோதமில்லாதனவென்றது யாதினால்?

கட-மட வுபாதிகளை நீக்கிக் கடாகாயமும் மடாகாயமும் ஏகமெனல் போலும், இராமன் மனிதனென்பதை நீக்கித் திருமாலென்பது போலும், கர்னன் இராதா புத்திரனென்பதை நீக்கிக் குந்தி புத்திரனென்பது போலும்.

தசமன் மரித்தானென்னும துயரமகற்றி நீயே தசமனென்பது போலும் உள்ளவாக்கியங்கள் இயல்பாகவே சித்தித்திராநின்ற வஸ்துக்களுக்கு ஏகத்துவம் கூறுகின்றதால், தத்துவமசி வாக்கியத்தால் பிரஹ்மாத்ம அய்க்கியங் கூறும். சுருதிக்கு விரோதமாகாதாம்.

இலக்ஷணை!

பதத்திற்கும் பதார்த்தத்திற்குமுள்ள சம்பந்தம் விருத்தி எனப்படும். அவ்விருத்தி இரண்டு விதம். சக்தி விருத்தி என்றும், லக்ஷணை விருத்தி என்றும், பதத்தின் அர்த்தத்தை அறிவது சக்தி விருத்தியாம். சக்தி விருத்தியாலறியப்படுவது சக்தியார்த்தம். அதுவே வாச்சியார்த்தமென்றும் சொல்லப்படும்.

பதத்தின் அர்த்தத்தை விட்டு அதன் சம்பந்தியை உணர்த்துவது லக்ஷணை விருத்தியாம்.

அதாவது, அடுப்புப்பற்றி எரிகிறது என்னும் பதத்தின் அர்த்தம். மண்ணால் செய்யப்பட்ட மூன்று மூலையோடுகூடிய

ஒரு வஸ்துவாம் அதுபற்றி எரியாது. பதத்தின் அர்த்தமான அடுப்பின் சம்பந்தமான விறகு பற்றி எரிகிறது என்று உணர்த்துவது லக்ஷண விருத்தியாம். பதத்தின் அர்த்தத்தை விட்டு அதன் சம்பந்தியான விறகு எரிகிறது என்றுணர்த்துவது லக்ஷண விருத்தியாம்.

யாதோரருத்த ஞானம் சக்தி விருத்தியாலுண்டாகாமல் இலக்ஷண விருத்தியாலுண்டாகுமோ, அது பதத்திலுடைய இலக்ஷியார்த்தமாம். வடகலைகளில் நிபுணர்களான பண்டிதர்கள் சுருதி ஸ்மிருதிகளிற் சொல்லும் வாக்கியார்த்தங்கள் பொருந்தாமல் விரோதமாமேல் விரோத பரிகாரமாய் அர்த்தமாகும்படிக்கு இலக்ஷண வாக்கியத்தால் பொருள்கொள்ளுவர். அவ்விலக்ஷணையும் மூவகையாகச் சொல்லுவர்.

சக்கியசம்பந்தம் இலக்ஷணையாம்.

அதாவது பதத்தின் அர்த்தத்தின் சம்பந்தமாம். அது விட்டலக்ஷணை, விடாதலக்ஷணை, விட்டுவிடாதலக்ஷணை என மூன்றும். இதையே ஜகல் லக்ஷணை, அஜகல்லக்ஷணை, ஜகதஜகல்லக்ஷணை எனவும் சொல்லப்படும்.

தத்துவமசி யென்னும் வாக்கியம் இம்மூன்றிலக்கணைகளினுலும் பொருளுணர்த்துகிறதோவெனின், பாகத்தியாகமாகிய விட்டுவிடாத இலக்ஷணையாலன்றி மற்ற இலக்ஷணைகளாலல்லவாம்.

அற்றேல் விட்டது விடாததென்னு மிரண்டிலக்கணைகளையும் சுருதி கூறியது விருத்தமாமே யெனின் சுருதிகளிலுள்ள மனம் பிரஹ்மமென்னும் வாக்கியம் விட்ட இலக்ஷணை

யினுலும் சச்சிதானந்தம் பிரஹ்மமென்னும் வாக்கியம் விடாத இலக்ஷணையினுலும் பொருளுணர்த்துகின்றமையின் விபர்த்த மல்லவாம்.

விட்ட இலக்ஷணையென்பது யாது? அதனுல் மனம் பிரஹ்மமென்னும் வாக்கியம் எங்ஙனம் பொருளுணர்த்து கிறது?

வாச்சியார்த்தங்கள் முழுதையும்விடுத்து அதன் சம்பந்தியை யுணர்த்துவது விட்ட இலக்ஷணையாம். கங்கையில் தெரு விருக்கிறதென்னும் வாக்கியத்திலுள்ள கங்கையென்னும் பதம் தன் வாச்சியார்த்தமாகிய தேவ நதிப்பிரவாகத்தில் தெருவின் ஸ்திதி கூடாதாதலின் விட்ட இலக்ஷணையினுல் தேவநதிப் பிரவாகமாகிய வாச்சியார்த்த முழுவதையும் விடுத்து அதன் சம்பந்தியாயுள்ள தீரத்தையுணர்த்துவதுபோல, மனம் பிரஹ்ம மென்னும் வாக்கியத்திலுள்ள மனமென்னும் பதம் தன் வாச்சியார்த்தமாகிய அந்தக்கரண விருத்தி சேதனமல்லாமையால் விட்ட இலக்ஷணையினுல் அந்தக்கரண விருத்தியாகிய வாச்சியார்த்த முழுவதையும்விடுத்து அதன்சம்பந்தியாயுள்ள சேதனமாகிய பிரஹ்மத்தை யுணர்த்துகின்றதாம்.

விடாத இலக்ஷணை யென்பது யாது?

அதனுல் சச்சிதானந்தம் பிரஹ்மமென்னும் வாக்கியம் எங்ஙனம் பொருளுணர்த்துகிறது?

வாச்சியார்த்தங்கள் முழுவதையும் விடாமல் அதன் சம்பந்தியை உணர்த்துவது விடாதலக்ஷணையாம். கருப்பு நிற்கிறது சிவப்பு ஓடுகிறதென்னும் வாக்கியத்திலுள்ள கருப்பு

சிவப்பென்னும் பதங்களின் வாச்சியார்த்தங்கள் கருநிறஞ் செந்நிறமாகிய குணங்களாம். குணங்கள் குணியைவிட்டுத் தனித்து நிற்கவும் ஓடவுங் கூடாவாதலின், அப்பதங்கள் விடாத இலக்ஷணையினல் கருநிறஞ் செந்நிறமென்னும் குணங்களாகிய வாச்சியார்த்தங்கள் முழுவதையும் விடாமல் அவைகளின் சம்பந்திகளாயுள்ள விசேஷிய பசுவையும் அசுவத்தையும் உணர்த்துவதுபோலச் சச்சிதானந்தம் பிரஹ்மமென்னும் வாக்கியத்திலுள்ள, சச்சிதானந்தமென்னும் பதங்களின் வாச்சியார்த்தங்கள் பிரஹ்மத்தின் சுபாவமாயுள்ள சத்து சித்து ஆனந்தமாகிய குணங்களாம். அக்குணங்கள் சுத்தப் பிரஹ்மமாகிய குணியைவிட்டுத் தனியே யிராவாதலின் அப்பதங்கள் விடாத இலக்ஷணையினல் சச்சிதானந்தமாகிய வாச்சியார்த்தங்கள் முழுவதையும் விடாமல் அவைகளின் சம்பந்தியாயுள்ள பிரஹ்மத்தையும் உணர்த்துகின்றதாம.

பாகத்தியாக இலக்ஷணை யாது ?

அதனல் தத்துவமசி மகாவாக்கியம் எங்ஙனம் பொருளுணர்த்துகிறது ? வாச்சியார்த்தமாகிய பொருள்களில் ஓர் பாகத்தை விடுத்து மற்ருேர் பாகத்தை விடாது உணர்த்துவது பாகத்தியாகமாகிய விட்டுவிடாத இலக்ஷணையாம்.

எங்ஙனமெனின் காசியில் அரசன் யானையின்மேல் பவனிவருவதைப்பார்த்துவிட்டு இராமேஸ்வரத்தில் வந்திருக்கும் யாத்திரைவாசிகளில் தேவதத்தனென்பவன், அக்காசியாசனை ஓர் வேற்றரசன் இராச்சியத்தைக் கவர்ந்துகொண்டு துரத்திவிட அவன் அரையிற் கோவணமும், அங்கத்தில்

விபூதியுருத்திராக்ஷமும் தரித்துக் கரத்தில் திருவோடு தாங்கிப் பாதசாரியாகத் தீர்த்தயாத்திரை நிமித்தமாய்ப் புறப்பட்டு ஸ்தலங்கள்தோறும் சுற்றிக்கொண்டு இராமேஸ்வரத்துக்கு வரக்கண்டு தன்னோடு கூடவந்த அந்நிய யாத்திரைவாசியாகிய எஞ்ஞதத்தனைநோக்கி முன்னர்க் காசியில் பவனிவர நம்மால் பார்க்கப்பட்ட அரசன் எவனோ அவன்தானிவனென்று கூற. எஞ்ஞதத்தன் கைகொட்டி நகைத்து அவன் அரசன் இவன் சந்நியாசி, அவன் ஆரகேயூரமகுட பீதாம்பரதாரி, இவன் விபூதியுருத்திராக்ஷ கோவணதாரி, அவன் கரத்திற் செங்கோலேந்திய இராச்சிய பரிபாலனன், இவன் கரத்திற்றிருவோடேந்திய பிக்ஷுகன், அவன் யௌவனன், இவன் வயோதிகன், விரோதாம்சங்களையுடைய அவனிவனன்று இவனவனன்று. அவனிவனென்பது உனது புத்திப் பிராந்தியாமென்று மறுக்க, தேவதத்தன் எஞ்ஞதத்தனை நோக்கி எஞ்ஞதத்தா, அவனென்னும் பதத்துக்கு வாச்சியார்த்தம் இளமைப் பருவம், இராஜரீகத்துவம் ஆரகேயூரமகுட பீதாம்பரம, சுதந்தரத்துவம் முதலிய விசேஷணங்களையுடைய சரீரியாகிய அரசனும்.

இவனென்னும் பதத்துக்கு வாச்சியார்த்தம் வயோதிகப் பருவம், பிக்ஷுகத்துவம, விபூதியுருத்திராக்ஷகோவணம், அசுதந்தரத்துவம் முதலிய விசேஷணங்களையுடைய சரீரியாகிய சந்நியாசியாம். ஆதலின் விட்டுவிடாத இலக்ஷணையினாலே அவனென்னும் பதவாச்சியார்த்தங்களில் இளமைப் பருவமுதலிய விசேஷணங்களாகிய ஓர் பாகத்தையும், இவனென்னும் பதவாச்சியார்த்தங்களில் முதுமைப் பருவமுதலிய விசேஷணங்களாகிய ஓர் பாகத்தையும் விடுத்து மற்ற பாகமா

யுள்ள விசேஷிய சரீரங்களிலுள்ள நிறம் மச்சமாதிய குறிகளை மாத்திரம் பார்ப்பாயென்றுகூற, எஞ்ஞதத்தன் அங்ஙனமே விசேஷணபாகங்களை நீக்கி விசேஷிய பாகமாகிய சரீரத்திலுள்ள நிறம், மச்சமாதிய குறிகளைநோக்கி அந்தச்சரீரத்திலிருந்த நிறங்குறியாதிகளே இந்தச் சரீரத்திலிருக்கிறபடியால் அந்தச் சரீரமே இந்தச் சரீரமென்றறிந்து அவன்தானிவன் இவன்தானவனென ஒப்பினான்

இங்ஙனம் எஞ்ஞதத்தனுக்குத் தேவதத்தன் உணர்த்தியதுபோலத் தத்துவமசி மகாவாக்கியத்திலுள்ள தது, மென்னும் பதத்தின் வாச்சியார்த்தம் காரியசகிதமாயை, மாயையின் கண்ணுள்ள ஆபாசம், அவையின் அதிஷ்டான சேதனம் ஆகிய மூன்றும் சேர்ந்துள்ள சர்வஞ்ஞத்துவாதி தரும சகிதனான ஈசுவரனும்.

துவமென்னும் பதத்தின் வாச்சியார்த்தம் காரிய சகித அவித்தை, அவித்தையின் கண்ணுள்ள ஆபாசம், இவைகளின் அதிஷ்டான சேதனம் ஆகிய மூன்றும் சேர்ந்துள்ள கிஞ்சிஞ்ஞத்துவாதி தரும சகிதனான ஜீவனும்.

விரோத தருமங்களையுடைய இவ்விருவர்க்கும் ஏகத்துவம் பொருந்தாமையின் அவ்வாக்கியம் பாகத்தியாகமாகிய விட்டுவிடாத இலக்ஷணையினால் தத்பத வாச்சியார்த்தத்தில் காரியசகித மாயை, மாயையின் கண்ணுள்ள ஆபாசம், சருவஞ்ஞத்துவாதி தருமங்களாகிய ஓர் பாகத்தையும், துவம்பத வாச்சியார்த்தத்தில் காரிய சகித அவித்தை, அவித்தையின் கண்ணுள்ள ஆபாசம், கிஞ்சிஞ்ஞத்துவாதி தருமங்கள் ஆகிய ஓர்

பாகத்தையும் விடுத்து அவைகளின் சம்பந்தியாயுள்ள பிரஹ்ம கூடஸ்தரென்னும் அதிஷ்டான சேதனங்களை விடாமல் அசி யென்னும் பதத்தால் பிரஹ்மமே கூடஸ்தர் கூடஸ்தரே பிரஹ்மமெனை விரோதமின்றி ஏகத்துவ முணர்த்துகின்றன வாம்.

இந்தத் தத்துவமசி மகாவாக்கியம் எந்த வேதத்தின வாக்கியம். இதனைப் பூர்வம் யாருக்கு யார் உபதேசித்திருக் கிறார்களெனின், சாமவேதத்தின் சாந்தோக்கிய வுபநிடதத் தின் ஆறுவது அத்தியாயத்திலுள்ள வாக்கியமாம். இதனைப் பூர்வம் உத்தாலகமுனிவர் தன்புத்திரனாகிய சுவேதகேதுவுக்கு உபதேசித்திருக்கிறார்.

சாமவேதத்திலிருப்பதுபோல மற்றைய மூன்று வேதங் களினுஞ் சீவப்பிரஹ்மங்கட்கு ஏகத்துவம் போதிக்கும் வாக் கியங்களிவையாம்.—இருக்குவேதத்தின் ஐதரேய வுபநிடதத் திற் பிரஞ்ஞானம் பிரஹ்மமெனவும். எசுர்வேதத்தின் தைத்திரியோபநிடதத்தில் அஹம் பிரஹ்மாஸ்மியெனவும், அதர்வணவேதத்தின் முண்டகோபநிடதத்தில் அயமாத்மா பிரஹ்மமெனவும், ஜீவப்பிரஹ்மங்கட்கு ஏகத்துவம் போதிக் குட வாக்கியங்களிலுள்ளன வாகும்.

இவைகளில் தத்பதத்திற்கு வாச்சியார்த்தமாகிய ஈசு னும இலக்ஷியார்த்தமாகிய பிரஹ்மமுமே மற்றைய மூன்று வாக்கியங்களிலுள்ள பிரஹ்ம பதத்திற்கு வாச்சியார்த்த லக்ஷி யார்த்தங்களாம்.

துவம் பதத்திற்கு வாச்சியார்த்தமாகிய ஜீவனும் இல க்ஷியார்த்தமாகிய கூடஸ்தருமே மற்றைய மூன்று வாக்கியங்

களிலுள்ள பிரஞ்ஞானம், அஹம், அயமாத்மா வென்னும் மூன்று பதங்களுக்கும் வாச்சியார்த்த இலக்ஷியார்த்தங்களாம்.

ஆதலால் தத்துவமசி மகாவாக்கியத்திற்குள்ள ஜீவப் பிரஹ்ம ஐக்கியமாகிய அர்த்தமே மற்றையமூன்று மகாவாக் கியங்களுக்குமுள்ள அர்த்தமாம். இவ்வாக்கியங்கள் ஒரே வித அர்த்தங்களையுடையனவாக இருக்கினும பிரஞ்ஞானம் பிரஹ் மமென்னும் வாக்கியம் இலக்ஷணவாக்கியமும்,

அகம் பிரஹ்மாஸ்மி யென்னும் வாக்கியம் அப்பியாச வாக்கியமும், தத்துவமசி யென்னும் மகாவாக்கியம் உபதேச வாக்கியமும், அயமாத்மா பிரஹ்மமென்னும் வாக்கியம் சாக்ஷாத்காரவாக்கியமுமாகும்.

இவ்வாக்கியங்களை லக்ஷண அப்பியாச உபதேச சாக்ஷாத் காரவாக்கியங்களென்றது யாதினல்.

பிரஞ்ஞானம் பிரஹ்மமென்னும் வாக்கியம், அறிவே பிரஹ்மமெனப் பிரஹ்ம விலக்கணங்கூறும் வாக்கியமும்,

அகம பிரஹ்மாஸ்மி யென்னும் வாக்கியம் நான் பிரஹ் மமென அப்பியாசிக்கும் வாக்கியமும்,

தத்துவமசி யென்னும் வாக்கியம் அது நீயாயிருக்கிறு யெனப் போதிக்கும் வாக்கியமும்,

அயமாத்மா பிரஹ்ம மென்னும் வாக்கியம் இந்த ஆத் மாவே பிரஹ்ம மென்னும் பிரத்தியக்ஷ அனுபவங் கூறும் வாக்கியமுமாக இருத்தலினலாம் மகாவாக்கியம் சமாப்தம்.

ஞான சாதனம்.

ஞான சாதனத்தைச் சொல்லுகிறேன் சிஷ்யனே செவியையும், மனதையும் சாவதானமாய் வைத்துக்கேள்.

ராகமாகிய பதார்த்தத்திலுள்ள, திடமான ஆசக்தியைத் தகித்துவிடு. லோபத்தை ஒழித்துவிடு. துவேஷத்தைக்கொன்றுவிடு, காமத்தை நீக்கிவிடு, பேதத்தை மாற்றிவிடு. ஜகத்கர்த்தா ஈசுவரன், அவன் உனக்கு வேறல்லன், நீ சச்சிதானந்தரூபப்பிரம்மம், என்று ஆசிரியர் முன் உபதேசித்ததை மறுபடியும் தயையுடன் சிஷ்யனுக்குச் சொல்லுகிறார். சிஷ்யனே, ஹீனத்தன்மையைவிட்டு உன் ஸ்வரூபத்தைப் பார். நீயே ஜனனமில்லாத சுத்தப்பிரஹ்மம். பார்க்கப்படுபவைகளையெல்லாம பிரகாசம் செய்கிறாய். உன் அஞ்ஞானத்தால் ஜகத்தையெல்லாம் நீ சிருஷ்டித்த பிறகு மறுபடியும் எல்லாவற்றையும் நாசஞ்செய்து நீ நாசமற்றவனாயிருக்கிறாய். மித்யாப் பிரபஞ்சத்தைப் பார்த்துக் கொஞ்சங்கூட மனவருத்தத்தை அடைகிறதில்லை. நீ தேவர்களுக்கெல்லாம் தேவனாயிருக்கிறாய். நீ சுகராசியாயிருக்கிறாய். மாயையினால் உன்னிடத்தில் ஜீவன் ஜகத்து ஈசுவரன் மூன்றும் விளங்குகின்றன. அது ரஜ்ஜுவில் சர்ப்பமும், கிளிஞ்சிலில் வெள்ளியும, வான் மலரும் விளங்குவதுபோலாம்.

மதியினால் விதியின் நீக்கம்.

பூர்வ வினையின்றி ஞானம் எங்ஙனமுண்டாம் என்பது சிஷ்யன் கேழ்கலானான். மதி பெரிதா விதி பெரிதா?

இச்சங்கைக்கு சமாதானமிதுவாம். மதியென்பது-அறிவு,

விதியென்பது - பிராரத்தம். இந்தப் பிராரத்தம் மதி என்று சொல்லப்பட்ட அறிவால் அறியப்படுவதாம். அறியப்படுவது தருசியம், அறிவது திருக்கு. ஆகலின், தடியால் கடத்தை யுடைப்பதுபோல், மதியால் விதியை விலக்கலாம்.

நமது கையிலுள்ள கனியை எறிந்துவிட்டால் அக்கனி மீண்டும் கரத்தில் வராது. நாம் போய் எடுத்தால்தான் நமது கரத்திற்கு வரும். இதைப்போல விதியைப் பார்க்க.

விதிபெரிதென்று சொல்லுவது எதைப்போலிருக்கிற தென்றால் பசுவில் கல்லுணிருப்பது தெரியாமல் தனது சிர முடைத்துக்கொண்டு எனது விதியென்று சொல்வதுபோலாம்.

(சங்கை) விதியென்னும் பிராரத்தத்தை விலக்கலா மென்றால், ஈஸ்வரன் சங்கல்பம் பிராரத்தம் அனுபவித்துத் தீருமென்பதால், அனுபவிக்காமல் நிவர்த்தியாகாதாம்.

கைவல்ய நவநீதம்.

இந்தச்சீவனால் வருமறு பகையெலா மிவன்செய லென்னுமல்,
அந்தத்தேவனால் வருமென்ற மூடர்க ளதோகதி யடைவார்கள்
இந்தச்சீவனால் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்,
அந்தத் தேவனு லன்றெனும் விவேகிக ளமலவீ டடைவாரே.

இதன் பொருள்.

இந்தச் சீவனால் செய்யப்பட்ட புண்ணிய பாவமனைத் தும் இவனது மதியினால் செய்யப்பட்டதல்லாமல், அந்த ஈசு வரனால் உண்டானதென்று சொல்லப்பட்ட மூடசிகாமணிகள். அதோகதியான மஹா நரகத்தையடைவார்கள். ஆனதால்

இந்த ஜீவனுல் செய்யப்பட்ட புண்ணிய பாவமனைத்தும் இவனது மதியால் செய்யப்பட்டதென்றும் அந்த ஈசுவரனுலல்லவாம் என்று அறிகிற விவேகிகள் நிர்மலமான மோக்ஷமடைவார். இதன்றியும, ஈஸ்வரன் நமது சங்கல்பத்தால் சொப்பன பிரபஞ்சம். சொப்பன பிரபஞ்ச சிருஷ்டி கர்த்தா பிரம்மா, ஸ்திதி கர்த்தா விஷ்ணு, சம்மார கர்த்தா ருத்திரன், ஆகியவனைத்தும் சொப்பனதசுல் நமது மனேகல்பிதம்.

அதுபோல், ஜாக்கிர பிரபஞ்ச சிருஷ்டி காத்தா நமது மனேகல்பிதர். நமது பிராந்தியினுலுண்டாகக்கூடிய கல்பித வஸ்து, நமது பிராரத்தத்தை நியமித்தாரென்பது வந்தியா சுதன் அநேக சைன்யங்களை ஜெயித்து ஐம்பத்தாறு தேசத்திற்கும் அதிபதியாயுளனென்பது போலாம.

(சங்கை) அப்படியாளுல் சரீர ஸ்திதி கூடாதாம்.

சமாதானம். சரீர ஸ்திதி வேண்டியதின்றும் சரீரம் நஷ்டமாதலே நலமாம். (நல்விருந்தென உவந்தெதிர்கொள்ளுவான் ஞானி) என்பது சுருதி. அசரீரமான ஞானி சரீரம் எப்பொழுது நஷ்டமாகுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்.

(சங்கை) சரீரம் நஷ்டமாகுமானுல், (நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி சதைரபி.) நாம் செய்த புண்ணிய பாவங்கள் கோடி கர்ப்பகாலமானுலும் அனுபவிக்காமல் நசிக்கிறதில்லை என்னும் சுருதிக்கு விரோதமாம்.

சமாதானம். நாம் செய்த புண்ணிய பாவம் அனுபவிக்காமல் நசிக்கிறதில்லை என்பது நமக்கும் சம்மதமாம்.

ஆனல், நாம் புண்ணிய பாவம் செய்யாவிட்டால் தானகவே அந்த பிராரத்தம் உண்டாகுமா? உண்டாகாது- ஆனதால் நமது மதியால் ஏற்பட்டதென்று நன்கு தெரிந்ததாம். நமது சிரத்திலுள்ள சிகைக்கு நாமே நெருப்பு வைத்துக்கொண்டது போலாம்.

ஒரு கம்மியனல் அவயவமின்றிய சொர்னத்தை முப்பத்திரண்டு லக்ஷணமுடைய நல்ல தேவஸ்திரீயாக செய்து விடுகிருன். மீண்டும் அந்த தேவஸ்திரீ ரூபத்தை அக்கம்மியனல் மாற்றி முன்போலவே சொர்னமாக்கிவிட முடியுமா, அல்லது முடியாதா? சொர்னமாக்க முடியும்.

அந்த சொர்னத்தால் செய்யப்பட்ட பதுமையினிடத்தில் நமக்கு நல்ல தேவஸ்திரீயென்று மோகமுண்டானது நமது அறியாமையா? அல்லது கம்மியன் அறியாமையா? நமது அறியாமையாம். நமது அறியாமையை நாம் நீக்கி தோற்றக்கூடிய இவ்வுரு தேவஸ்திரீயன்று, சொர்னமென்று அறியலாமா? அல்லது அறியமுடியாதா? சொர்னமென்றறியலாம்.

இதுபோல உலகத்திலுள்ள போக போக்கியமான சொர்ன ஸ்திரீயை பார்த்து மயங்கி ஆப்பை அசைத்துத் தனது பீஜத்தை மாட்டிக்கொண்ட மர்கடம்போல், நமது சேஷ்டையால் ஜனன மரணமென்னும் இடுக்கிலகப்பட்டுக் கொண்டு மீண்டும் நமது விதியென்று சொல்வது மிகவும் அறியாமையாம்.

கைவல்ய நவநீதம்.

ஆனபாவிக ளடைவன நரகங்க ளவசிய மானாலும்,
தானமந்திர விரதவோ மங்களாற் றவிருமென்பது பொய்யோ,
ஈனமாம் பலசன்ம சஞ்சிதவினை யெத்தனை யானாலும்,
ஞானமாங் கனல்சுடுமென்ற மறைமொழி நம்பினால் வீடுண்டே·

இதன் பொருள்.

கர்மத்துக்குறித்தான பாவிகள் நரகமடைவது உண்மையானாலும் (அந்த பாவம்) தர்மம் செய்வதாலும் ஜெபம் கிருச்சிர சாந்ராயண தபசுகளினாலும் யாகம் ஆகிய இவைகளால் நிவர்த்தியாகும் என்ற சுருதிகள் பொய்யோ, பொய்யாகாது. மெய்யாம். ஈனமாயுள்ள பல ஜென்மத்துக்கும் பீஜமான சஞ்சிதமனைத்தும் ஞானாக்கினி தகிக்கும் என்ற சுருதி வாக்கியத்தை சத்தியமாமென்று நம்பிக்கை வருமேயானால் மோக்ஷம் கரதலாமலகம்போலாம். விதியையும் மதியால் விலக்கலாமென்பது இச்சுருதியின் கருத்தாம்.

பிரதிபந்தம்.

(ஞானத்துக்கு பிரதிபந்தமாயுள்ளவை மூன்றும்) அவை பூதப்பிரதிபந்தம், பௌஷியப் பிரதிபந்தம், வர்த்தமானப்பிரதிபந்த மென மூன்றும்.

பூதப்பிரதிபந்தமாவது—பூர்வம் அனுபவித்த தார தனாதிகளைக்குறித்து சிந்தனை செய்வதாம்.

பௌஷ்ய பிரதிபந்தமாவது—எனது விதிக்கீடாக அனேக ஜன்ம மெடுத்தனுபவிக்கவேண்டுமென்பது பௌஷியப்பிரதி பந்தமாம்.

வர்த்தமானப் பிரதிபந்தமாவது—புத்தி மந்தம், துர்ச் சங்கம், விஷயப்பற்று, புத்தி சஞ்சலம் ஆகிய இவையாம்.

ஞானியின் லக்ஷணம்.

ஞானியின் லக்ஷணம் பகவான் கீதையில் (5) வது அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறார். அதாவது ஆத்மஸ்வரூபத்தை யறிபவனாகி தத்வ வித்து தனது ஆத்மாவை அசங்கத்தன்மை உள்ளும் புறமும் நிறைந்திருத்தல் என்பவற்றைத் தரிசித்தலாகிய பிரஞ்ஞையுடையவனாய்த் தான் வெளியில் பார்த்தும், கேட்டும், தொட்டும், முகர்ந்தும், புசித்தும், நடந்தும், தூங்கியும், சுவாசம் விட்டும், பேசியும், மலஜலங்களை விஸர்ஜனஞ்செய்தும், கைகளாற் கொடுக்கல், வாங்கல் செய்தும், கண்களை மூடியும், திறந்தும், சப்தாதி விஷயங்களாகிய இந்திரிய விஷயங்களில் இந்திரியங்களே பிரவிருத்திக்கின்றன. நான் கேட்பவன், பரிசிப்பவன், முகர்வோன், புசிப்பவன், நடப்பவனல்லன் என்னும் லக்ஷணமுடைய விருத்தியை எப்போதும் தரிக்கின்றவனாய், அவ்வக் கர்மங்களை இந்திரியங்களே செய்கின்றன. நான் அக்கிரியனாயிருத்தலால் ஒன்றும் செய்கிறதில்லை ஆனால், அவ்வக்கிரியைகளுக்குச் சாக்ஷியாயிருத்தலால் நிஷ்கிரிய வடிவத்தால், சும்மாவிருக்கின்றேன். தன்னை அந்தந்தக் கிரியையில் நிஷ்கிரியனாகவே காண்க.

ஞானியின் நிச்சயம்.

இம்பருடன் விண்ணொழிக வலதுறைக சசியருக்க னிருக்குமட்டும்,
விம்பமயச் சித்துருவாய் விளங்குமெனக் கதனாலே விசேட
மென்னே,

கும்பமிப்போ திடைகவன்றிச் சிலகாலம் நிலைபெறக் கும்பம் பம்பும்,
அம்பரத்தினுக் கணுவாத் திரமேனும் விசேடமென்ப தணுகுறாதே.

இதன் பொருள்.

(மலம், மூத்திரம், மாமிசம், உதிரம், அத்தி, மஜ்ஜை என்பனவாதி அசுத்த சமுதாயரூப) இச்சரீரம், இன்றைக்கு அழிந்தாலும் சரியே அல்லது சந்திர சூரியர் இருக்கிறபரியந்தம் இருந்தாலும் சரியே.

சர்வாதாரமாயும் சித்ரூபமாயும் விளங்காநின்ற எனக்கு அதனால் விசேஷணமென்ன. (உதாரணம்) மண்ணால் செய்யப்பட்ட கடம் இக்கஷணத்தில் உடைந்தாலும் சரியே அல்லது சிலகாலமிருந்தாலும் சரி அந்த கடத்தில் வளைபட்ட ஆகாயத்திற்கு அணுவளவும் லாப நஷ்டமணுகாதாம்.

பஞ்ச கிலேசம்

1. அவித்தை. 2. அஸ்மிதை. 3. ராகம். 4. துவேசம். 5. அபிநிவேசம் ஆகிய ஐந்து கிலேசம் ஞானிக்கின்றாம்.

விசாரித்துப்பார்க்க எது இல்லாமற்போகிறதோ அது அவித்தை யெனப்படுமே.

புத்தி ஆத்மாக்களின் பேதம் தெரியாமல் அபேத உணர்ச்சி அஸ்மிதை.

அநுகூல பதார்த்தத்தின் ஞானத்தாலுண்டாகும் புத்தி விருத்தி ராகமாம்.

பிரதிகூல பதார்த்தத்தின் ஞானத்தாலுண்டாகும் புத்தி விருத்தி துவேஷமாம்,

மரணபயததால் சரீரத்தை ரக்ஷித்தலிலுண்டாகும் ஆக்கிரகம் அபிநிவேசம்.

அஞ்ஞானிக்கு இராகம் குறி. ஞானிக்கு விராகம் குறி.

ஞானி அஞ்ஞானியின் பேதம்.

பிரம்மஞானியும் அஞ்ஞானியைப்போல் விவகரித்தால் ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பேதம் யாது?

யோக்கியா அபேதமென்றும், அயோக்கிய அபேதமென்றும் அபேதம் இரண்டுவிதம். இதில் யோக்கிய அபேதமென்பது, கட்டையிடமாக அக்கினியிருக்கிறது. அக்கட்டையை கடைதலால் அவ்வக்கினி உற்பத்தியாகிறது. பின் அவ்வக்கினி கட்டையை தகித்து அக்கினிமயமாய்விட்டது. கட்டையும் அக்கினியும் அபேதமாகத்தானிருக்கிறது. அக்கினிமயமாய் கட்டை அபேதமாயிருத்தல். யோக்கிய அபேதமாம். கட்டைமயமாய் அக்கினி யிருந்தது அயோக்கிய அபேதமாம்.

இதைப்போல (தாஷ்டாந்தத்தில்) ஆத்மாவாய அக்கினியும், சரீரமான கட்டையும் அபேதமாயிருக்கிறது. இதில் சரீரமயமாய் ஆத்மா யிருத்தல் அயோக்கிய அபேதம். இது அஞ்ஞானியிடத்தில் இருக்கிறது.

இச்சரீரமான கட்டையை சிரவண மனன நிதித்தியாசனமென்னும் கடைதல் வாயிலாய் ஞானமாகிய அக்கினி உண்டாய் சரீர கட்டையை தகித்து ஆத்ம மயமாக்கிவிட்டது

யோக்கிய அபேதமாம். இது ஞானியிடமிருக்கிறது. அயோக்கிய அபேதத்தால் பந்தமாம். யோக்கிய அபேதத்தால் மோக்ஷமாம்.

ஞானியின் அபேதம்.

ஒரு புருஷன் தனது ஒரு கையால் மற்றொரு கையையேனும், காலையேனும், தலையையேனும் அடித்தானுபின் அவ்வடியால் அப்புருஷனுக்குக் குரோதமுண்டாகாதன்றோ. ஏனெனின் ஒரு சரீரத்தின் கண்ணேயிராநின்ற அஸ்தபாதாதியவயவங்கட்கு ஆன்மா ஒன்றேயாம். அங்ஙனமே ஒரு சரீரத்தால் மற்றொரு சரீரம் அடிமுதலியவை ஞானிக்கு சம்பந்திக்கினும் அறிஞருக்குக் குரோதமுண்டாகாது. ஏனெனின் சாஸ்திரப் பிரமாணத்தாலும், யுக்தியினுலும், தனதனுபவத்தாலும் அறிஞன் எல்லாத் தேகங்களிடத்தும் ஒரே ஆன்மாவை நிச்சயம் செய்துளான். ஆகையால் இத்தகைய ஞானிக்குத் தனது சரீரம் சுகசாதனம் ஆவதேபோலச் சர்வ சரீரங்களும் சுக சாதனங்களாம். இக்காரணத்தால் அவ்வறிஞன் எவர்மீதும் குரோதம் செய்யான்.

அல்லது எவன் அபகாரம் செய்யும் ஜீவரிடத்தே குரோதஞ் செய்வானே அவன் ஆன்மவேத்தாவன்றும். மற்றே அவன் ஆன்மாவை நாசம் செய்பவனும். இக்காரணத்தானே நாஸ்திகனும். யாவரையும் இம்சிப்பவனும்.

கருத்திதுவாம் — அசங்க ஆன்மாவிற்கோ அபகாரம் உண்டாகாது. மற்றே சரீராதி ஜடபதார்த்தங்கட்கு அபகாரமுண்டாம். அச்சரீராதிகளிடத்தே யாவனுக் கான்மபுத்தி யுண்

டாமோ, அவனுக்குச் சரீரத்திற் கபகாரம் செய்யும் ஜீவரிடத்தே குரோதமுண்டாம். ஆகையால் சரீராதிகளிடத்தே ஆன்ம புத்தியே குரோதகாரணமாம். சார்வாக நாஸ்திகரும சரீரத்தையே யான்மாவென அங்கீகரித்துளார். ஆகையால் குரோதமுடைய புருஷனிடத்தும் நாஸ்திகனிடத்தும சிறிதுமாத்திரமும் பேதமின்ரும்.

குரோத உற்பத்தியின் பின்னர் இப்புருஷன் சரீரத்தாலும், மனத்தாலும், வாக்காலும் ஜீவர்கட்கு இம்சை யவசியம் செய்வன். ஆகையால் குரோதமுடைய புருஷனே சர்வ பூதப்பிராணிகளை ஹிம்சை செய்பவனும். இதுகூறியதா லிது துணியப்பெறும்.

எவனுக்கு ஏக அத்வதீய ஆன்மாவின் ஞானமுண்டாமோ அவன் எப்பிராணியின்மீதும் குரோதம் செய்யான்.

குரோதம் செய்பவன் எங்ஙனம் கழுதை மண்ணின் பாரத்தை யெடுக்கின்றதோ, அங்ஙனம் குரோதமுடைய புருஷன் நிஷ்பலமாகவே சாஸ்திர ரூப பாரத்தை யெடுப்பன்.

ஜீவன்முக்தன் மைத்ரியாதி குணங்கள்.

மைத்ரி, கருணை, முதிதை, உபேக்ஷையென நான்காம்.

1. சர்வ ஜீவரிடம் சினேகபாவம் மைத்ரியாம்.
2. துக்கிகளைக்கண்டால் சகிக்காமல் உண்டாகும் இரக்கம் கருணையாம்.
3. சதாசாரமுடைய சத்துக்களிடம் சந்தோஷம் முதிதையாம்.

4. தனக்கு அபகாரம் செய்யப்பட்ட பாவிகளிடத்திலும், ராகத்துவேஷமில்லாதிருத்தல் உபேக்ஷையாம். ஆகிய நான்கும் ஞானிக்கு அலங்காரமாம்.

ஜீவன்முக்தன் லக்ஷணம்.

சமாதி காலத்திலே சிற்குச் சந்தனுதிப் பிரதீதி இல்லாததினுலேயும், ஒருக்கால் சமாதியைவிட்டு யெழுந்திருந்து விவகாரம் பண்ணும்போது சிற்குச் சந்தனுகிப் பிரதீதியிருந்தாலும இது தள்ளத்தக்கது பொல்லாது, இது கூட்டத்தக்கது நல்லது யென்கிற புத்தி யில்லாததினுலேயும் சுகதுக்கம் வந்தாலும் அதன் மூலமாய் சந்தோஷ விதனமிரண்டும் வாராது. யாதொருததன் இந்த ஜன்மத்தில் முயற்சியன்றியிலே தானே பிராரத்த கன்மவசத்தினுல் வந்த பிக்ஷான்னுதியைக்கொண்டு சரீர தாரணத்தை உடைத்தாயிருக்கிறுனே அவன ஜீவன் முக்தன்.—இனிப் பகவற்கீதையின் பன்னிரண்டாமத்தியாயத்திற் பகவர்பக்தன் பகவானுலே வர்ணிக்கப்பட்டிருக்கிறுன்.

அதாவது, சர்வப்பிராணிகளிடத்திலேயும் துவேஷமில்லாதவனும், மைத்ரி கருணையுள்ளவனும், யானெனதென்னப்பட்ட அகங்கார மமகாரமில்லாதவனும். சுகதுக்கங்களிலே சமனும், சதா சந்துஷ்டனும், திடமாகச் சொரூப நிச்சயத்தை யுடைத்தானவனும், சொரூபத்தில் தானே எப்போதும் ரமிப்பவனும், சத்துரு, மித்துரு, மானவமானஞ் சீதோஷ்ணஞ் சுகதுக்க முதலான, துவந்துவங்களிற் சமனும், நிந்தையையும் ஸ்துதியையுஞ் சமமாகப் பார்க்கிறவனும் மௌனியாயும் ஒரு யிடத்தில் நியமமாக வாசம்பண்ணுதவனு

யுஞ், சர்வாத்மாவாயிருக்கிற நம்மிடத்தில் வாசுதேவோக மென்கிற திடபக்தியை யுடைத்தானவனும், யாதொருத்த னுண்டோ அவன் நம்முடைய பக்தனென்று அர்ச்சுனனுக்கு பகவான் சொல்லியிருக்கிறார்.

பிராஹ்மணன் இலக்ஷணம்.

ஸ்ரீ வியாசாதிகளினாலே பிராமணன் வர்ணிக்கப்பட்டிருக்கிறான்.

அதாவது, அரையிலே கட்டிக்கொள்ளுகிற சோமன் மேலுக்குப் போட்டுக்கொள்ளுகிற உத்தரீயமிரண்டுமில்லாமற் பாய் முதலானதொன்றுமில்லாத வெறுந்தரையிற் கையைத் தானே தலையணையாக வைத்துக்கொண்டு சயனம் பண்ணுகிறவனும், குப்பையிலே கிடக்கிற கந்தையினாலே கௌபீனத்தையைத் தரித்துக்கொண்டவனும், பிராரத்த கருமத்தால் வரப்பட்ட பிக்ஷா அன்னத்தினாற் தேகதாரணம் பண்ணுகின்றவனும், தெண்டதாரியாயும், சதா சொரூபத்தியானபரனும், யேகாங்கியாயும், சாந்தனும் யாதொரு பிரஹ்மஞ்ஞானி யுண்டோ அவன் பிராம்மணன்.

(தண்டமாவது, ஆன்மஞான ரூபதண்டத்தைத் தரித்தவனே ஏகதண்டியாவன். கேவல காஷ்ட தண்டமன்று.

கேவலங் காஷ்ட தண்டத்தைத் தரித்து ஆன்மஞான தண்டமின்றியவனாய், ஸ்திரீ தனமுதலியவற்றில் பற்றுற்றவனாகிய அச்சந்யாசி சரீர நாசத்தின்பின் இரௌரவாதி மகா கோர நரகங்களை அடைவன்.

சுருதி.

யஸ்ஸ ப்ராவ்ரஜ்ய ஸம்பூத்வா புனஸ்ஸேவதி மைதினம்,
ஷஷ்டி வருஷ ஸஹஸ்ராணி விஷ்டாயாம் ஜாயதே க்ருமிஹி,,

இதன் பொருள்.

யாதொரு புருஷன் சந்நியாச ஆசிரமம் பெற்றுக் கொண்டு ஈஷணாத்திரயங்களில் பற்றுடையவனுயிருப்பானே அப்புருஷன் மரித்தபின் மகா கோர நரகத்தில் அறுபதினுயிரம் வருஷம் புழுக்களுடனே தானும் ஒரு ஜீவனுய் கிடக்க வேண்டும. ஆனதால் ஹே அன்பர்காள் விரக்தியின்றி சந்நியாசம் செய்துக்கொள்ளாதிர்கள். (பிராம்மணன் என்பதற்கு)

சுருதி.

ஜந்மநாஜாயதே ஸூத்ரோ வ்ரத்தவம் தாத்துவிஜஸ் மருதஹ,,
வேதாப்யாஸாத் பவேத் விப்ரோ பிரம்மஞ்ஞாநாதி பிராம்
மணஹ,,

இதன் பொருள்.

ஜந்மத்தால் இம்மனுடர்க்கு சூத்திரத்தன்மையாம். (அதன்பின்) எஞ்ஞோபவீத சமுஸ்காரத்தால் துவிஜனுகிருன். (பின்னர்) வேத அப்யாசத்தால் விப்ரனுகிருன். (பின்னர்) உபநிஷத் வாயிலாய் பிரம்மஞ்ஞான மடைந்தவன் பிராம்மணனும்.

இந்த திரேகம் நீங்கி நிருபாதிக பிரம்மரூபமாயிருந்தவண்ணமே இருத்தல் விதேக மோக்ஷம். சகலரும் இதை விசாரம் செய்து மோக்ஷமடையக்கடவர்.

ஸாந்தி. ஸாந்தி. ஸாந்தி.

இந்த புஸ்தகம் வேண்டுபவர்கள் கீழ்கண்ட
விலாசத்திற்கு எழுதவும்.

கொ. ஆ. இரங்கசாமி செட்டியார்,
பவானி தளவாய்பேட்டை போஸ்டு,
ஈரோடு மார்க்கம்,
கோயமுத்தூர் ஜில்